
# வரலாறு

## ஆசிரியர் வழிகாட்டி

(2015 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்)

# தரம் 10



சமூக விஞ்ஞானத்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம
இலங்கை
வலைகடப்பிடம் : www.nie.lk

# வரலாறு

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 10

(2015 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்)

மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம
ஸ்ரீலங்கா

இணையத்தளம் : **www.nie.lk** மின்னஞ்சல் : info@nie.lk

வரலாறு

ஆசிரியர் வழிகாட்டி

தரம் - 10

முதலாம் பதிப்பு : 2015

© தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.

ISBN

சமூக விஞ்ஞானத்துறை,
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம

இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல் : info@nie.lk

அச்சுப்பதிப்பு :
அச்சகம்
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
ஸ்ரீலங்கா

# பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2015ஆம் ஆண்டிலிருந்து தரம் 6, 10 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர் களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பட்டு, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்து பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும்,அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிநிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப் படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பட்ட பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

**பணிப்பாளர் நாயகம்**
தேசிய கல்வி நிறுவகம்

## பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

ற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக் கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத் துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் கைந்நூல்கள் தயாரிக்கப்படு கின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையை தேசிய மட்டத்தில் பேணுவது அவசிய மாகும். எனினும், ஆசிரியர் கைந்நூலிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள்,தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற் காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் கைந்நூலை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் கைந்நூல் மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் கைந்நூல் ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப் பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் கைந்நூல் அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்**
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்

**வளப்பங்களிப்பு**

**இணைப்பாக்கம் :** **திருமதி. டீ. எச். சந்திமா நிசானி தர்மபால**
சிரேட்ட விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை

**பாடவிடய ஆலோசனை :**
பேராசிரியர் இந்திராணி முனசிங்க (ஓய்வுநிலை)
கொழும்பு பல்கலைக்கழகம்
பேராசிரியர் ராஜ் சோமதேவ
களனி பல்கலைக்கழகம், தொல்பொருளியல் பட்டப்பின் நிறுவனம்
பேராசிரியர் பத்மசிரி கன்னங்கர
ஶ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

**எழுத்தாளர் குழு வெளிவாரி :**
டீ. ஏ. ஏ. சிரிசேன
ஆசிரிய ஆலோசகர், வலயக்கல்வி அலுவலகம், தம்புத்தேகம
என். கமர்தீன்
ஆசிரிய ஆலோசகர், வலயக்கல்வி அலுவலகம், கெக்கிராவை
கே. எஸ். ரஞ்சனி
ஆசிரிய ஆலோசகர், வலயக்கல்வி அலுவலகம், ஹொரணை
டபிள்யு. ஏ. பியசீலி
ஆசிரியர் சேவை, ஶ்ரீராகுல ம. ம. வி. அலவ்வை
ஏ. இந்திராணி
ஆசிரியர் சேவை, யேசு பாலகர் கன்னியர் மட, தேசிய பாடசாலை, இரத்தினபுரி
எச். எம். நலின் பண்டார
ஆசிரியர் சேவை, குருவிற்ற மத்திய மகா வித்தியாலயம், குருவிற்ற

**எழுத்தாளர் குழு உள்வாரி :**
டீ. எச். சந்திமா நிசானி தர்மபால
சிரேட்ட விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை
டபிள்யு. எஸ். எஸ் குணவர்தன
உதவி விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை

## ஆசிரியர் வழிகாட்டி

## பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

2007 ஆம் ஆண்டு தொடக்கம் பாடசாலைக் கலைத்திட்டத்தில் மையப்பாடங் களுள் ஒன்றாக இருந்துவரும் வரலாறு எனும் பாடம் 2015 ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் அதேவிதமாக நடைமுறைப்படுத்தப்படும். 6-9 ஆந் தரங்களுக்காக வாரமொன்றுக்கு இரண்டு பாடவேளைகளும் 10-11 ஆந் தரங்களுக்காக வாரமொன்றுக்கு மூன்று பாடவேளை களும் ஒதுக்கப்ட்டுள்ளன.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 10-11 ஆம் தரங்களுக்குரிய பாடத்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டை நடத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

6-11 ஆந்தரங்களுக்காக தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையின் படி பிரதானமாக இருபத்தொரு தேர்ச்சிகளின் கீழ் வரலாற்றுப்பாடக் கலைத்திட்டம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தயாரிக்கப் பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டி பாடத்திட்டம், பாடத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள் எனும் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்துள்ளது.

'வரலாறு' எனும் பாடத்தின் மூலம் மாணவரிடத்தே கட்டியெழுப்ப எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை விருத்தி செய்யும் போது பாடங்களும் அப்பாடங்களைப் பயிலுவதற்காகப் பயன்படுத்தும் முறையியல்களும் முக்கியமானவை. இது தொர்பாக ஆசிரியரின் பணி/ கருமங்களை இலகுபடுத்தும் பொருட்டு, பாடத்திட்டத்தின் இரு பகுதிகள் உள்ளடங்குமாறு மாதிரி செயற்பாடுகள் இங்கு தரப்பட்டுள்ளன. தமது ஆக்கியல் திறமைகளைப் பயன்படுத்தி, வகுப்பறைத் தேவையின்படி, இச்செயற்பாடுகளை மேலும் விருத்தி செய்து கொள்வதோடு புதிய செயற்பாடுகளையும் ஆசிரியர்கள் தயாரித்துக் கொள்ளலாம். வரலாறு எனும் இப்பாடத்தின் குறிக்கோள்களை அடையத்தக்க வகையில் குறைந்த பட்சம் 50 சதவீதமேனும் செயன்முறைச் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட கற்றல் சந்தர்ப் பங்களை திட்டமிட்டு வழங்குவதன் மூலம் பாடங்களைப் பயில்வதில் மாணவரை வழிப்படுத்துவதே இங்கு எதிர்பார்க்கப்படுவதாகும்.

அதற்கமைய 'வரலாறு' எனும் பாடத்தின் குறிக்கோள்களை நிறைவு செய்தவாறு தேர்ச்சிமிக்க, புதிய உலகுக்குப் பொருத்தமான இளஞ் சந்ததியினரை உருவாக்குவதற்கு வழிகாட்டுவதே இந்த ஆசிரியர் வழிகாட்டியின் எதிர்பார்ப்பாகும். இது தொடர்பாக உங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களையும் முன்மொழிவுகளையும் எமக்கு அனுப்பி வைக்குமாறு தயவுடன் வேண்டுகிறோம்.

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iii |
| பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iv |
| கலைத்திட்டக் குழு | v |
| ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள் | v i |
| பாடத்திட்ட உள்ளடக்கம் | v i i i |
| கற்றல் - கற்பித்தற் செயன்முறைக்குரிய வழிகாட்டல் | 01-50 |
| 10.1 வரலாறு பயில்வதற்குரிய மூலாதாரங்கள் | 01-04 |
| 10.2 இலங்கையின் குடியேற்றங்கள் | 05–11 |
| 10.3 இலங்கையின் அரசியல் அதிகார வளர்ச்சி | 12-14 |
| 10.4 இலங்கையின் பண்டைய சமூகம் | 15–19 |
| 10.5 இலங்கையில் புராதன விஞ்ஞானமும் தொழினுட்பமும் | 20-24 |
| 10.6 வரலாற்று அறிவும் அதன் நடைமுறைப் பிரதியீடுகளும் | 25–28 |
| 10.7 உலர்வலய பண்டைய நாகரிகங்களின் வீழ்ச்சி | 29-34 |
| 10.8 கண்டி இராசதானி | 35–43 |
| 10.9 ஐரோப்பிய மறுமலர்ச்சி | 44-47 |
| 10.10 இலங்கையும் மேற்குலகும் | 48–50 |

# வரலாறு

## பாடத்திட்டம்

## தரம் 10

(2015 இலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்)

**சமூக விஞ்ஞானத்துறை**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மஹரகம**
**ஸ்ரீலங்கா**
**www.nie.lk**

# அறிமுகம்

நமது நாட்டின் தனித்துவத்தை அறிந்து, அதைப் பாதுகாத்து உலக மாற்றங்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய ஆற்றல் நிறைந்த நாட்டுப்பற்றுள்ள இலங்கையரை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு பாடசாலைக் கலைதிட்டத்தின் கட்டாய பாடமாக 2007ம் ஆண்டில் இருந்து வரலாறு பாடம், பாடசாலை மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இந்நோக்கத்தினை மேலும் அர்த்தமுள்ளதாகச் செயற்படுத்த 2015ம் ஆண்டிலிருந்து புதிய கல்விச் சீர்திருத்தத்தின் மூலம் தேசிய பொதுக்குறிக்கோள்கள் மற்றும் தேசிய பொது தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு 'வரலாறு' பாடத்திற்கு இனங்காணப்பட்ட தேர்ச்சிகள் 23 ஐ அடிப்படையாகக் கொண்டு 6 ஆம் தரத்திலிருந்து 11 ஆம் தரம் வரையிலான வரலாறு பாடக்கலைத்திட்டம் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

10 ஆம் தரத்திற்கான இப்பாடத்திட்டமானது அம்முயற்சியின் பெறுபேறாகும். 2015ம் ஆண்டிலிருந்து 10 ஆம் தரத்தில் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள இப்பாடத்திட்டத்தில் பதினொரு தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு பத்து பாட உள்ளடக்கம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இதன்படி இலங்கையின் தனித்துவத்தையும் எமது பாரம்பரியங்களையும் விளங்கிக் கொள்வதற்கும் வரலாற்று ரீதியான பூகோள மேம்பாடுகள் எமது நாட்டின் வரலாற்றில் ஏற்படுத்திய தாக்கங்களை அறிந்து கொள்வதற்கும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

# தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்கு உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கரு திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

i. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணகருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலம் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

ii. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

iii. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

vi. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

v. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

vi.. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

vii. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

viii. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

(மூலம் : தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003)

ix.

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

(I) தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு: கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம்

எண்ணறிவு: பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்

சித்திர அறிவு: கோடு, உருவம் என்பவற்றின் கருமத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்

தகவல் தொழினுட்பத் தகைமை: கணனி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

(II) ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
  - நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
  - மன எழுச்சிகள், நுண்ணறிவு

(III) சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்பணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

(IV). வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.

பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்

அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்

அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்

பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

(V). சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

(VI). ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்

(VII) ''கற்றலுக்குக் கற்றல்'' தொடர்பான தேர்ச்சிகள்

விரைவாக மாறுகின்ற, சிக்கலான ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

(மூலம் : தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003)

## வரலாறு பாட நோக்கங்கள்

6 ஆம் தரத்திலிருந்து 11 ஆம் தரம் வரை கலைத்திட்டத்தினைக் கற்பதன்மூலம் கீழ்வரும் நோக்கங்களை மாணவர்கள் அடைய முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1. வரலாற்றுப் போக்கு, வளர்ச்சி என்பன பற்றி விளங்கிக் கொள்ளல மூலம் வரலாறெங்கும் நிகழ்ந்த மாற்றங்கள் பற்றி விளங்கிக்கொள்ளல்.
2. கடந்தகாலம் தொடர்பாகப் பெறும் விளக்கத்தின் மூலம் நிகழ்காலத்தைப் புரிந்துகொள்ளலும் எதிர்கால நிலைமைகளை அறிந்து கொள்ளலும்.
3. தேசிய தனித்துவத்தினை அறிந்து தேசிய பாரம்பரிய அருஞ்சொத்துக்களைப் பாதுகாத்து, நாட்டுப்பற்றுள்ள பிரசைகளாதல்.
4. தேசிய பிரச்சினைகளை ஒப்பீட்டு ரீதியாக நோக்குதல்.
5. ஏனைய கலாச்சாரங்களுக்கு மதிப்பளித்தல்.
6. கால ஒழுங்கு, மூலாதார நுணுகியாய்வு, காரண காரியத் தொடர்பு என்பன மூலம் கட்டி எழுப்பப்படும் பகுத்தறிவு ரீதியான விளக்கத்தையும் அறிவையும் நடைமுறை வாழ்க்கைக்காகப் பயன்படுத்துதல்.
7. முக்கிய வரலாற்று நபர்களின் சரிதைகளை முன்மாதிரியாகக் கொள்ளல்.
8. வரலாற்று ரீதியாக உலகில் ஏற்பட்ட முக்கிய வளர்ச்சிப்போக்குகள் இந்நாட்டு வரலாற்றில் ஏற்படுத்திய தாக்கங்கள் தொடர்பாக விளங்கி உலகின் புதிய போக்குகளை எதிர்கொள்ளும் ஆற்றலைப் பெறுதல்.
9. காலம், வெளி ஆகியன அடிப்படை தொடர்பான அறிவை வளர்த்துக் கொள்ளல்.
10. வரலாற்றுத் தகவல்களின் ஊடாக இடங்களை அறிந்து கொள்ளல்.

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| வரலாற்றைக் கட்டி யெழுபபுவதற்கு் உதவும் மூலாதாரங்களைக் கற்பதன் மூலம் தர்க்க ரீதியாக அறிவை வளர்த்துக் கொள்வார். | 1.1 வரலாற்றை அடிப்படை யாகக் கொண்டு வரலாறு கட்டியெழுப்பப் படும் விதத்தை விளக்குவார். | **1. வரலாறு பயில்வதற்குரிய மூலாதாரங்கள்**<br>1.1 மூலாதார வகைகள்<br>• தொல்பொருளியல்<br>• இலக்கியம் | • மூலாதாரங்களை இனஙங்காண்பார்.<br>• மூலாதாரங்களை வகைப்படுத்துவார்<br>• மூலாதாரங்களைக் கொண்டு வரலாற்றை விவரிப்பார். | 04 |
| | 1.2 வரலாறு கற்பதன் பெறுமானத்தை விளக்குவார். | 1.2 வரலாற்றை கற்பதன் முக்கியத்துவம் | • வரலாற்றைக் கற்பதன் முக்கி யத்துவத்தை விளக்குவார்.<br>• வாழ்க்கையை வெற்றிகரமான தாக்கிக் கொள்வதற்காக வர லாறு மூலம் கிடைக்கும் முன் மாதிரிகளைப் பயன்படுத்து வார். | |

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| மானிட விருத்தியின் வளர்ச்சிப் போக்கினை எடுத்துக் காட்டுவார். | 2.1 இலங்கையின் ஆரம்ப குடியேற்றங்களின் அடிப்படை அம்சங் களைக் கற்று கால வெளி அடிப்படையில் பல்வகைமையை எடுத்துக் காட்டுவார். | **2. இலங்கையில் குடியேற்றங்கள் தாபிதமாதல்**<br>2.1.1 வரலாற்றுக்கு முற்பட்ட காலம்<br>2.1.2 முன் வரலாற்றுக் காலம் | • வரலாற்றுக்கு முற்பட்ட மற்றும் முன் வரலாற்றுக் காலங்களை விவரிப்பார்.<br>• வரலாற்றுக்கு முற்பட்ட மற்றும் முன் வரலாற்றுக் காலக் குடி யேற்றங்களை தேசப்படமொன் றில் குறித்துக்காட்டுவார்.<br>• வரலாற்றுக்கு முற்பட்ட மற்றும் முன் வரலாற்றுக் காலங்களின் அடிப்படை இயல்புகளை விவரிப்பார். | 06 |
| | 2.2 அறைகூவல்களை எதிர் கொண்டு இயற்கைச் சூழலுடன் ஒன்று கலந்து புதிய நாகரிகமொன்று கட்டியெழுப்பப்பட்ட விதத்தை எடுத்துக் காட்டுவார். | 2.2 வரலாற்றுக்காலம் | • வரலாற்றுக்காலம் என்பதை விளக்குவார்.<br>• வரலாற்றுக்காலக் குடியேற்றங் களைத் தேசப்படமொன்றில் குறித்துக் காட்டுவார்.<br>• வரலாற்றுக் காலத்தில் பொது மக்கள் அறைகூவல்களை வெற்றி கொண்ட விதத்தை விவரிப்பார். | |
| நாட்டில் அரசியல் அதிகார வளர்ச்சிக்கான காரணங்களை நுணுகியாய்வார். | 3.1 இலங்கையின் ஆரம்ப கால சமூகத்தைச் சமநிலையாகப் பேணி வருவதற்காக அரசியல் அதிகாரம் மையப்பட்ட விதத்தை தேடியறிவார். | **3. இலங்கை அரசியல் அதிகார வளர்ச்சி**<br>3.1 அரசுகளுக்கு முற்பட்ட காலம்<br>3.2 அரசாட்சியும் அரசர்களும்<br>3.3 அரசர்கள் | • அரசாட்சியின் அடிப்படையை விவரிப்பார்.<br>• அரசாட்சி எண்ணக்கரு, அர சாட்சி கிடைத்தல், அரசனின் பொறுப்புக்கள் ஆகியவற்றைப் பகுத்தாய்வார்.<br>• இலங்கையின் ஆரம்பகால ஆட்சியாளர் பற்றிய தகவல் களை விவரிப்பார். | 12 |

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| பண்டைய அனுபவங்கள் மூலம் தற்காலத்துக்காக முன்மாதிரிகளைப் பெறுவார். | 4.1 இராசரட்டை நாகரிகத்தின் நிருவாக, சமூக, பொருளாதார தொழிற்பாட்டின் வினைத்திறனை எடுத்துக் காட்டுவார். | **4. இலங்கையின் பண்டைய சமூகம்**<br>4.2.1 நிர்வாகம் ஒழுங்கமைப்பு<br>4.1.2 பொருளாதாரம்<br>• விவசாயம்<br>• கைத்தொழில்<br>• வணிகம் | • இராசரட்டை நாகரிகத்தின் நிருவாகத்தையும் பொருளாதாரத்தையும் விளக்குவார்.<br>• நிருவாக ஒழுங்கமைப்பானது பொருளாதார வினைத்திறனின் மீது பங்களிப்புச் செய்த விதத்தை எடுத்துக்காட்டுவார்.<br>• இராசரட்டைச் சமூகத்தின் வினைத்திறனைப் பகுத்தாராய்வார். | 12 |
| | 4.2 இராசரட்டை நாகரிகத்தின் மக்கள் வாழ்க்கையினால் பிரதி பலிக்கப்படும் விழுமியங்களின் தனித்துவத்தைக் காப்பார். | 4.2.1 பண்பாடு<br>• சமயம்<br>• கல்வி<br>• இலக்கியம்<br>4.2.2 இனங்களுக்கிடையிலான சகவாழ்வு | • இராசரட்டை நாகரிகத்தின் பண்பாட்டுத் தகவல்களை விவரிப்பார்.<br>• பண்டைய பொதுமக்கள் இனங்களுக்கு இடையிலான சகவாழ்வுடன் வாழ்ந்தமையை எடுத்துக் காட்டுவார்.<br>• நல்லொழுக்கம் மற்றும் இன சகவாழ்வுக்காக வரலாற்றிலிருந்து முன்மாதிரிகள் பெறுவார். | |

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| இலங்கையின் பெருமையை உலகிற்கு வெளிக் காட்டிய எமது மூதாதையர்களின் விஞ்ஞான அறிவு, மற்றும் தொழினுட்ப திறன்களின் மகிமையைக் கற்று, அவ்வாறான திறன் களை விருத்தி செய்து கொள்வார். | 5.1 விஞ்ஞானம் தொழினுட்பமும் மற்றும் அவற்றின் பிரயோகத் தில் சுதேச தனித் துவம் உண்டு, என்பதை விளங்கி அதனைப் பகுத்தாய்வார். | **5. இலங்கையின் புராதான விஞ்ஞானமும் தொழிநுட்பமும்**<br>5.1 பிரயோக விஞ்ஞானத்தின் ஆரம்ப கட்டங்கள் (முன் வரலாற்றுக் காலம்) | • பிரயோக விஞ்ஞானத்தின் ஆரம்ப கட்டங்களை விளக்குவார்.<br>• முன் - வரலாற்றுக்காலத்தில் விஞ்ஞானம் மற்றும் தொழினுட் பம் மூலம் எடுத்துக் காட்டப் படும் சுதேச தனித்துவத்தைப் பகுத்தாய்வார். | 18 |
| | 5.2 வரலாற்று யுகத்திற்கு உரிய விஞ்ஞான, தொழினுட்ப அறிவு முறைமைகளின் அருஞ்செல்வங்களைக் காத்து அவ்வாறான திறன்களை விருத்தி செய்து கொள்வார். | 5.2 விஞ்ஞான பிரயோக முதிர்ச்சி (வரலாற்றுக் காலம்)<br>• நீர்முகாமைத்துவம்<br>• கட்டடக்கலை (கட்டட நிர்மாணம், நகர நிர்மாணம், பூங்காக்கள்)<br>• வைத்திய முறைகளும் சுகாதாரமும் உடனலமும்<br>• சிறுகைத் தொழில்கள்<br>• பிற (பாரம்பரிய நம்பிக்கைகள், அபிசார் வழிமுறைகள், சுதேச அறிவு, ....) | • வரலாற்றுக் காலத்தின் விஞ்ஞான் மற்றும் தொழினுட்பப் பயன்பாட்டையும் முதிர்ச்சி யையும் பகுத்தாய்வார்.<br>• வரலாற்றுக் காலத்தைச் சேர்ந்த விஞ்ஞான, தொழினுட்ப அறிவை விவரிப்பார்.<br>• வெவ்வேறு துறைகள் தொடர் பாக பண்டைய மக்கள் வச மிருந்த அறிவுப்பொக்கிசங்கள் தற்கால மக்கள் வாழ்க்கையை வெற்றிகரமான தாக்கிக் கொள் வதற்கான தகுதியை எடுத்துக் காட்டுவார். | |

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| இலங்கை வரலாற்று மக்கட் சமூகத்தினால் கிடைக்கப்பெற்ற தூர நோக்கு மற்றும் பாரம் பரியங்கள் பற்றிய விளக்கத்தினைப் பெற்று, அவற்றினைத் தமது வாழ்க்கையை நெறிப்படுத்திக் கொள்வதற்குப் பயன்படுத்துவார். | 6.1 எமது மூதாதையர்கள் ஊடாக எமக்கு உரித் தான சமூக தூர நோக்கு மற்றும் பொது வழக்காறுகளை, அர்த்தமுள்ள சமூகமொனறினைக் கட்டியெழுப்ப பிரயோகிக்கத்தக்க விதத்தை எடுத்துக் காட்டுவார். | **6. வரலாற்று அறிவும் அதன் நடை முறைப் பிரதியீடும்**<br>6.1 சமூக ஒழுங்கமைப்பு<br>6.2 சட்டமும் பாரம்பரியங்களும்<br>6.3 பணமும் செலாவணியும்<br>6.4 பெண்களின் பங்களிப்பு<br>6.5 சூழல் பாதுகாப்பு<br>6.6 சுதேச உணவு | • வரலாற்று மக்கட் சமூகத்தி னூடாகக் கிடைத்த சமூக நோக்கு மற்றும் பொது வழக் காறுகளை விளக்குவார்.<br>• சமூக நோக்கையும் பொது வழக்காறுகளையும் நடைமுறையில் பிரதியீடு செய்த விதத்தைப் விவரிப்பார்.<br>• தற்காலத்தில் அர்த்தபுஷ்டி யான சமூகமொன்றினைக் கட்டி யெழுப்புவதற்காக வரலாற்று அறிவைப் பயன் படுத்தத்தகக விதத்தை எடுத்துக்காட்டுவார். | 10 |
| இராசரட்டை நாகரிகத் தின் தளர்ச்சியும் வீழ்ச்சியும் காரணமாக சமூகத்தின் பல்வேறு பட்ட துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களைப் பகுத்தாய்வார். | 7.1 நீண்டகாலமாக செயற் பட்ட இராசரட்டை இராசதானி வீழ்ச்சி யடைந்த விதம்பற்றி விசாரித்தறிந்து, இதற்கு அடிப்படையாக அமைந்த காரணிகளை கோவைப்படுத்தி, நிலையாக பேணிச் செல்வதற்கு அவசிய மான காரணிகளைத் திரட்டுவார். | **7. உலர் வலய பண்டைய நகரகங்களின் வீழ்ச்சி**<br>7.1.1 நகரங்கள் தோற்றம் பெற்றமை<br>7.1.2 நகரங்களின் வீழ்ச்சிக்கான காரணங்கள் | • நகரங்கள் தோன்றுவதற்கான காரணங்களை விளக்குவார்.<br>• உலர்வலய பண்டைய நகரங் கள் வீழ்ச்சியடைந்தமைக்குக் காரணங்காட்டுவார். | 06 |

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாடவேளைகள் |
| --- | --- | --- | --- | --- |
| | 7.2 ஆட்சி மையங்கள் குறுகிய காலப் பகுதி களில் கூட இந் நாட்டினது சிறந்த ஆட்சியாளர்களினால், நாட்டின் நிலையான தன்மை பாதுகாக்கப் பட்ட விதத்தினை விளக்குவார். | 2.2 இரண்டாம் நகர மயமாக்கல்<br>• தம்பதெனியா, யாப்பகுவை, குருணாகல், கம்பளை, கோட்டே, யாழ்பாணம், வன்னியார்கள் | • ஆட்சி மையங்கள் மாற்றமடைந் தமைக்கான காரணங்களைப் பகுத்தாய்வார்.<br>• நிலையாகப் பேணப்பட்ட அரசு கள் தொடர்பான தகவல்களை முன்வைப்பார்.<br>• வரலாற்று இடங்களை இலங் கைப் புறவரிப் படமொன்றில் குறித்துக் காட்டுவார். | 04 |
| | 7.3 ஆட்சி மையங்கள் மாற்ற மடைந்தமையால் பொருளாதாரமும் பண் பாடும் மாற்ற மடைந்த விதத்தை விசாரணை செய்வார். | 7.3.1 பொருளாதாரக்கோலம்<br>7.3.2 சமயம்<br>7.3.3 கலையும் கட்டடக்கலையும் | • இரண்டாம் நகரமயமாக்கக் காலத்தின் பொருளாதாரக் கோலத்தை விவரிப்பார்.<br>• இரண்டாம் நகரமயமாக்கல் காலத்தின் பண்பாட்டு நடவடிக்கைகளை விளக்குவார்.<br>• இரண்டாம் நகரமயமாக்கல் காலத்தின் பொருளாதாரமும் பண்பாடும் மாற்றமடைவதில் செல்வாக்குச் செலுத்திய காரணங்களை விவரிப்பார். | |
| | 7.4 இரண்டாம் நகரமய மாக்க காலத்தில் இலக்கியத் துறையில் ஏற்பட்ட விருத்தி யினை எடுத்துக் காட்டுவார். | 7.4 இலக்கியம் | • இரண்டாம் நகரமயமாக்கல் காலத்தின் இலக்கிய தகவல் களை விளக்குவார்.<br>• இலக்கியத்தில் ஏற்பட்ட விருத் திக்கும் மலர்ச்சிக்கும் காரணங் காட்டுவார். | |

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| இலங்கை அரசர்களின் மேம்மையை மதித்து, சுதேச அருஞ்செல்வங் களை பாதுகாக்க முனைவார். | 8.1 கண்டி இராசதானியின் ஆரம்பம் மற்றும் பரம்பல் பற்றிய தகவல்களைத் தேடியறிவார். | **8. கண்டி இராசதானி**<br>8.1 ஆரம்பமும் பரம்பலும் | • கண்டி இராசதானியின் ஆரம்பத்தையும் பரம்பலை யும் விவரிப்பார்.<br>• கண்டி இராசதானி அரசர்களின் மேன்மையை விளக்குவார்.<br>• கண்டி இராசதானியின் சுயா தீனம் பாதுகாக்கப்பட்ட விதத்தை விளக்குவார். | 08 |
| | 8.2 கண்டி இராச்சியத்தின் நிர்வாகக் கட்டமைப் பானது, சமகால சமூக, பொருளாதாரச் செயற் பாடுகளின், வினைத் திறன் மேம்பாட்டில் பங்களிப்புச் செய்த விதத்தினை எடுத்துக் காட்டுவார். | 8.2.1 நிர்வாக ஒழுங்கமைப்பு<br>8.2.2 நகரத் திட்டமும் கிராமிய ஒழுங்கமைப்பும் | • கண்டி இராசதானியின் நிருவாக முறையியலைப் பகுத்தாய்வார்.<br>• கண்டி இராசதானியின் பிராந் தியப் பிரிவுகளைத் தேசப் படமொன்றில் குறித்துக் காட் டுவார்.<br>• நிருவாக ஒழுங்கமைப்பானது, சமூக, பொருளாதார வினைத் திறனின் மீது பங்களிப்புச் செய்த விதத்தை விளக்குவார். | |
| | 8.3 கண்டி இராசதானியின் மக்கள் வாழ்க்கையை விசாரித்தறிந்து, அதில் வெளிக்காட்டப்படும் விழுமியங்களின் தனித்துவத்தைப் பாது காப்பார். | 8.3.1 பொருளாதாரப் போக்கு<br>8.3.2 சமூக ஒழுங்கமைப்பு | • கண்டி இராசதானியின் பொரு ளாதாரக் கோலத்தை விளக் குவார்.<br>• கண்டி இராசதானியின் சமூக ஒழுங்கமைப்பை விவரிப்பார்.<br>• நல்லொழுக்கமிக்க சமூக மொன்றினைக் கட்டியெழுப்புவ தற்கு கண்டிக்காலத்திலிருந்து பெறத்தக்க முன்மாதிரிகளை எடுத்துக்காட்டுவார். | |

| தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| வரலாற்று ரீதியான உலகப் போக்குகள் இந்நாட்டு வரலாற்றில் ஏற்படுத்திய தாக்கங் களை விசாரித்தறிந்து, தமது அருஞ் செல்வங் களையும் தனித்துவத் தையும் பாதுகாத்து, உலகின் போக்குகளை எதிர்கொள்ளும் வலிமை யைப் பெற்றுகொள்வார். | 9.1 ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சிக்கான வரலாற்றுப் பின்னணியை நுணுகி நோக்குவார். | **9. ஐரோப்பிய மறுமலர்ச்சி**<br>• மறுமலர்ச்சி - அறிமுகம் | • மறுமலர்ச்சி என்பதை பகுத் தாய்வார்.<br>• மறுமலர்ச்சிக்குக் காரணங் காட்டுவார்.<br>• ஐரோப்பியாவின் மாற்றத்தின் மீது மறுமலர்ச்சி செல்வாக்குச் செலுத்திய விதத்தை எடுத்துக் காட்டுவார். | 06 |
| | 9.2 ஐரோப்பிய மறுமலர்ச்சி யானது இலங்கை மீது செல்வாக்குச் செலுத் திய விதத்தை நுணுகி யாய்வார். | • ஐரோப்பிய மறுமலர்ச்சியானது இலங்கை மீது செல்வாக்குச் செலுத்திய விதம் | • மறுமலர்ச்சியை ஒரு பூகோள ரீதியான போக்காக எடுத்துக் காட்டுவார்.<br>• ஐரோப்பிய மறுமலர்ச்சியானது இலங்கை மீது செலுத்திய செல்வாக்கைப் பகுத்தாய்வார்.<br>• பூகோள ரீதியான போக்கு களை எதிர்கொள்ள வேண்டிய விதத்தை விளக்குவார். | 06 |
| நாடொன்றில் வெளி நாட்டு ஆதிக்கம் ஏற்படுவதில் செல்வாக்கு செலுத்தும் காரணி களை, மேற்கத்தேயர் இலங்கையில் அதிகாரத்தைத் தாபித்தமையின் ஊடாக நுணுகியாய்வார். | 10.1 தொழினுட்ப ஆதிக்கம் மற்றும் இராசதந்திர உபாயங்கள் மூலம போர்த்துகேயரும ஒல்லாந்தரும் தமது ஆதிக்கத்தினை பரவச் செய்த விதத்தினை விளக்குவார். | **10. இலங்கையும் மேற்கத்தேயரும்**<br>10.1.1 போர்த்துகேயரின் வருகை<br><br>10.1.2 போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது இலங்கையின அரசியல் நிலைமை<br>• கரையோரப் பிரதேசங் களைக் கைப்பற்றல்<br><br>10.1.3 ஒல்லாந்தர் வருகை<br>• கரையோரப் பிரதேசங் களைக் கைப்பற்றல் | • போர்த்துக்கேயரும் ஒல்லாந் தரும் இலங்கையின் கரை யோரப் பிரதேசங்களில் அதிகாரத் தைத் தாபித்தவிதத்தைப் விளக்குவார்.<br>• போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது இலங்கையின அரசியல் நிலைமையை விளக்குவார்.<br><br>• வெளிநாட்டவரின் முன்னிலை யில் இலங்கையர் காட்டிய எதிர்ப்புக்களை எடுத்துக் காட்டுவார். | |

# கற்றல் கற்பித்தற் செயன்முறைக்கான அறிவுறுத்தல்கள்

# 10.1 வரலாறு பயில்வதற்குரிய மூலாதாரங்கள்

வரலாற்றைக் கட்டியெழுப்புவதற்கு மூலாதாரங்கள் தேவை. மூலாதாரங்கள் பல்வகைப் பட்டவை. அவ்வாறான வெவ்வேறு மூலாதாரங்களின் ஊடாக வரலாறு கட்டியெழுப்பப் படும் விதத்தையும் வரலாற்றைக் கற்பதால் கிடைக்கும் பயன்களையும் இந்த அலகின் மூலம் கற்கலாம்.

**தேர்ச்சி**

1.0 மூலாதாரங்களைக் கொண்டு, வரலாறு கட்டியெழுப்பப்படும் விதத்தினைக் கற்று அதன் மூலம் பெறும் போதனைகளை வாழ்க்கைக்குத் துணையாகக் கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்**

1.1 வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு வரலாறு கட்டியெழுப்பப்படும் விதத்தை விளக்குவார்.

**பாடவேளைகள் : 03**

**கற்றற்பேறுகள்**

- மூலாதாரங்களை இனங்காண்பார்.
- மூலாதாரங்களை வகைப்படுத்துவார்.
- மூலாதாரங்களைக் கொண்டு வரலாற்றை விவரிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

10.1 வரலாறு பயில்வதற்குரிய மூலாதாரங்கள்

1.1 மூலாதாரப் பாகுபாடு

- வரலாறு என்பது கடந்த காலத்தைப் பற்றிய விடயப்பரப்பிலும் அதில் அடங்கும் காலத்தையும் பொருளையும் விளங்கிக் கொள்வதற்காக வரலாற்றை விவரிக்கும் மூலாதாரம் தேவை என்பதை விளக்குதல்.
- கடந்த காலத்தில் நிகழ்ந்தவற்றை அறிந்து கொள்வதற்குத் துணையாகக் கொள்ளத்தக்க இரண்டு மூலாதார வகைகள் உள்ளன என்பதை எடுத்துக் காட்டுதல்.
    - I. இலக்கிய மூலாதாரங்கள்
      இது இரண்டு பகுதிகளாலானது

1. சுதேசிய இலக்கிய மூலாதாரங்கள் : (உள்நாட்டு இலக்கிய மூலாதாரங்கள்)
   - பாலிவம்சக் கதைகள், பாலி அட்டக் கதைகள், சமயக் கிரந்தங்கள் செய்யுள் மற்றும் உரைநடை இலக்கியப் படைப்புக்கள்
   - இந்நூல்கள் எழுதப்பட்டமைக்கான காரணங்கள்
   - வரலாற்றைக் கட்டியெழுப்புவதற்காக இந்நூல்கள் பயன்படும் விதம்

2. வெளிநாட்டு இலக்கிய மூலாதாரங்கள் :
   - இலங்கைக்கு வருகைதந்த வெளிநாட்டவர்களும், இலங்கை தொடர்பான தகவல்களைக் கேட்டறிந்த வெளிநாட்டவர்களும் எழுதிய நூல்கள், அறிக்கைகள்
   - வரலாற்றைக் கட்டியெழுப்புவதற்காக இந்நூல்களின் பயன்கள்

i. தொல்பொருளியல் மூலாதாரங்கள் :
   - பண்டைக் காலத்துக்குரிய ஏடுகள், ஏனைய பொருள்கள் இதிலடங்கும்.
   - வெவ்வேறு தொல்பொருளியல் மூலாதாரங்கள்
   - தொல்பொருள் மூலாதாரங்களைக் கொண்டு வரலாறு கட்டியெழுப்பப் படும் விதத்தை விளக்குதல்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

திட்டமிடப்பட்ட பாடத்திற்கு அமையத் தேவையான பொருட்களைத் தயார் செய்து கொள்ளவும்.

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

பாடத்துக்குப் பொருத்தமானவாறு கற்றற்பேறுகள் அளக்கப்படும் வகையில் நியமங்களைத் தயாரித்துப் புள்ளி வழங்குங்கள்.

**தேர்ச்சி மட்டம்**

1.2 வரலாறு கற்பதன் பெறுமானத்தை விளக்குவார்.

**பாடவேளைகள் : 01**

**கற்றற்பேறுகள்**

- வரலாற்றைக் கற்பதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.
- வாழ்க்கையை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்காக வரலாறு மூலம் பெறத்தக்க முன்மாதிரிகளை எடுத்துக்காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**1.2 வரலாறு கற்பதன் முக்கியத்துவம்:**

- தாம் வாழும் சமூகம் பற்றியும் உலகம் பற்றியும் விளங்கிக்கொள்ளல்.
- கடந்த காலத்தின் ஊடாக தற்காலத்தை விளங்கி, எதிர்காலத்தை கட்டியெழுப்புதல்.
- எதிர்கால தலைமைத்துவமேற்றல்.
- தேசிய தனித்துவத்தை இனங்காணல்.
- ஏனைய பண்பாடுகளை மதித்தல்.
- பல்வேறு அபிப்பிராயங்களை சகித்தல் / பொறுத்தல்
- தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புதல்.
- காலம், வெளி என்பன தொடர்பான கருத்தை வளர்த்தல்.
- பகுத்தறிவுச் சிந்தனை, விமர்சன சிந்தனை விருத்தி

மேற்படி பாடப்பகுதிகளை உள்ளடக்கும் வகையில் பின்வருமாறு பாடத்தை திட்டமிட்டுக் கொள்ளலாம்.

"வரலாறு கற்பதன் மூலம் எனது வாழ்க்கைக்காகப் பெறத்தக்க முன்மாதிரிகள்" எனும் தலைப்பில் செய்தித்தாளொன்றுக்கு கட்டுரையொன்று எழுதுதல்.

- இதனை ஒரு தனியாள் செயற்பாடாக நடைமுறைப்படுத்துங்கள்.
- கட்டுரை எழுதுவதற்கு போதுமான கால அவகாசம் வழங்குங்கள்.
- மாணவரது ஆக்கங்களுள் மிகப் பொருத்தமான சிலவற்றை தெரிவு செய்து வகுப்பு மாணவர் அனைவருக்கும் அவற்றை வாசிக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.

**பிரதான சொற்கள் / எண்ணக்கருக்கள்**

- தனித்துவம் : தமக்கேயுரியவையான பழக்கவழக்கங்கள், ஆடையணிகள், மொழி, கைத்திறன் கலைகள் போன்றவை
- வெளி : வானிலை, காலநிலை, ஆறுகள் அருவிகள் மலைகள், சமவெளிகள், முதலான பௌதிகநிலை

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- வரலாறு கற்பதன் முக்கியத்துவம் பற்றி எழுதப்பட்ட நூல்கள்

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

- வரலாறு கற்பதால் பெறத்தக்க பயன்களைக் குறிப்பிடுவார்.
- தமது வாழ்க்கையின் வெற்றிக்காக வரலாற்றிலிருந்து முன்மாதிரிகளைப் பெறலாம் எனக் குறிப்பிடுவார்.
- கட்டுரையைத் தரமுடையதாகத் தயாரிப்பார்
- அறிவை ஏனையோருடன் பகிர்ந்து கொள்வார்.
- குறித்த தினத்தில் கட்டுரையை ஒப்படைப்பார்.

## 10.2 இலங்கையில் குடியேற்றங்கள் தாபிதமாதல்

இற்றைக்கு ஓரிலட்சத்து முப்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் குடியேற்றம் ஆரம்பித்தமைக்குச் சான்றுகள் உள்ளன. அவ்வாறாகத் தோன்றிய ஆரம்பக் குடியேற்றங்களின் தன்மை, பரம்பல், வளர்ச்சி ஆகியன தொடர்பாக தகவல்களிலேயே இந்த அலகில் கவனஞ் செலுத்தப்படுகிறது.

**தேர்ச்சி**

- மானிட விருத்தியின் வளர்ச்சிப் போக்கினை எடுத்துக் காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்**

2.1 இலங்கையின் ஆரம்ப கால குடியேற்றங்களின் அடிப்படை அம்சங்களைக் கற்று, காலவெளி அடிப்படையில் பல்வகைமையை எடுத்துக் காட்டுவார்.

**பாடவேளைகள் : 03**

**கற்றற்பேறுகள்**

- வரலாற்றுக்கு முற்பட்ட மற்றும் முன்வரலாற்றுக் காலங்களை விவரிப்பார்.
- வரலாற்றுக்கு முற்பட்ட மற்றும் முன் வரலாற்றுக் காலக் குடியேற்றங்களைத் தேசப்படமொன்றில் குறித்துக்காட்டுவார்.
- வரலாற்றுக்கு முற்பட்ட மற்றும் முன் வரலாற்றுக் காலங்களின் அடிப்படை இயல்புகளை விவரிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

10.2. இலங்கையில் குடியேற்றங்கள் தாபிதமாதல்

**2..1 இலங்கையில் ஆரம்பக் குடியேற்றங்கள்**

வாழ்க்கை முறை, தொழில்நுட்பம் ஆகியவற்றுக்கமைய பிரதானமாக 2 பகுதிகளாகும் அதனைப் பின்வருமாறு விபரித்தல்.

i. வரலாற்றுக்கு முற்பட்ட காலம்
   - வேட்டையாடியமை, உணவு சேகரித்துப் பிழைத்தல், ஏறத்தாழ கி.மு 125,000 தொடக்கம் கி.மு 1800 வரையிலான காலம்

ii. முன் வரலாற்றுக் காலம்
   - உணவு உற்பத்தி செய்து கொள்ளல். அதாவது விவசாயம், உலோகப் பயன்பாடு, நிரந்தரமான குடியேற்றங்கள், ஏறத்தாழ கி.மு 2400 தொடக்கம் கி.மு 450 வரையிலான காலம்

- மேற்படி இரண்டு யுகங்களினதும் சிறப்பியல்பு வரலாறு தொல்பொருளியல் காரணிகளின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டுள்ளமையாகும்.

2.1.1 வரலாற்றுக்கு முற்பட்ட காலம்

- குடியேற்றங்களின் பரம்பல்
- ஆதி ஹோமோசேபியனின் வருகை
- இலங்கையின் வெவ்வேறு காலநிலை வலயங்களில் குடியேற்றப் பரம்பல்.

- குடியேற்றங்களின் அடிப்படை இயல்புகள்
  - குடியேற்றங்களின் தன்மையை இரண்டு பகுதிகளாக காட்டலாம்
    - i திறந்த வெளியான வேட்டையிடங்கள்
    - ii இயற்கையான கற்குகைகள்

- வாழ்க்கை முறை
  - இடம்பெயரும் வேட்டைக்காரர்கள்
  - அலைந்து திரிந்து உணவு சேகரித்தல்
  - சிறிய சமூகக் குழுக்களாக வாழ்தல்
  - உலர்வான காலங்களில் திறந்த வெளியான இடங்களிலும் மாரி / மழைக்காலங்களில் கற்குகைகளிலும் வாழ்ந்தமை

- உணவு முறை
  - வேட்டையாடித் தேடிய உணவு
  - கிழங்கு வகை, தானிய வகை, காட்டு வாழை, காட்டு ஈரப்பலா போன்ற இயற்கையாக வளர்ந்த உணவுகள்.
  - உப்பு பயன்படுத்தியமை
  - உணவை தீயில் சுட்டுப் பயன்படுத்தல்.

- தொழினுட்பம்
  - மரக்கோல்கள், விலங்கு என்புகள், கற்கள் போன்றவற்றால் உபகரணங் கள் செய்தமை.
  - வெவ்வேறு செயல்களுக்காக உபகரணங்களைப் பயன்படுத்தியமை
    - கிழித்தல், வெட்டுதல், நசித்தல், தோண்டுதல் போன்றவற்றுக்காக

- மனிதனின் உடலின் தன்மை
  - உயரம், நிறை, உடலின் இயல்புகள்
  - ஆயுட்காலம்

- அபிசார முறைகள்

2.1.2 முன்வரலாற்றுக்காலக் குடியேற்றங்கள்

- முன்வரலாற்றுக்காலம் உருவாகியமைக்குக் காரணங்கள்
  - காலநிலையில் ஏற்பட்ட மாற்றங்கள்
  - சனத்தொகை அதிகரிப்பு
  - கி.மு 2400 அளவில் இந்த இயல்புகள் தோன்றியமை

- குடியேற்றங்களின் தன்மை
  - நிரந்தரமான குடியேற்றங்களும் வாழிடங்களும் உருவாக்கப்பட்டமை
  - வரிச்சுச் சுவர் வீடுகள் அமைக்கப்பட்டமை
  - வீட்டின் உட்புறம் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டமை

- வாழ்க்கை முறை
  - வாழ்க்கை ஓர் ஒழுங்கான தன்மையில் கட்டியெழுப்பப்படல்
  - உணவு உற்பத்தியில் அதாவது கமத்தொழிலில் கவனஞ் செலுத்தப் பட்டமை

- தொழினுட்பம்
  - உலோகப் பயன்பாடு
  - கற்களாலும் இரும்புகளாலும் ஆக்கப்பட்ட உபரகரணங்களின் பயன்பாடு
  - மட்பாண்டங்கள் ஆக்குதலும் பூச்சுப் பூசுதலும்
  - பூதவுடல்களைத் தகனஞ் செய்து அஸ்தியை மட்பாண்டங்களில் இட்டு வைத்தல்.

இலக்கிய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள விஜயனும் அவனது பரிவாரத் தினரும் இலங்கையில் வந்திறங்கிய போது இந்நாட்டில் வாழ்ந்த குவேனி உட்பட சுதேச மக்கள் முன்வரலாற்றுக் காலத்துக்கு உரியோராவார்.

இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்டகால, முன்வரலாற்றுக்கால மற்றும் வரலாற்றுக்கால குடியேற்றங்கள் தொடர்பான அடிப்படை அம்சங்களில் காணப்படும் வேறுபாடுகளை இனங்காண்பதற்காக கட்டுரை எழுதுதல்.

- இதனை தனியாள் செயற்பாடாக நடைமுறைப்படுத்துங்கள்.
- இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட கால, முன்வரலாற்றுக்கள், வரலாற்றுக்கால குடியேற்றங்களின் அடிப்படையான இயல்புகள் எனும் தலைப்பின் கீழ் கட்டுரை எழுதுமாறு மாணவர்க்கு அறிவூட்டுங்கள்.
- கட்டுரையை எழுதுவதற்காக ஏறத்தாழ ஒரு வார கால அவகாசம் வழங்குங்கள்.
- சகல கட்டுரைகளையும் மதிப்பீடு செய்யுங்கள்.

**பிரதான சொற்கள் / எண்ணக்கருக்கள்**

- வரலாற்றுக்கு முந்திய காலம் - எழுத்து மூலச் சான்றுகள் இல்லாத காலம்
- முன்வரலாற்றுக்காலம் - எழுத்து மூலம் சான்றுகள் கிடைப்பதற்கு முற்பட்ட அண்மித்தகாலம்
- அபிசார முறைகள் - பழக்க வழக்கங்கள், வழக்காறுகள்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- வரலாற்றுக்கு முந்திய, முன்வரலாற்றுக்காலம் பற்றிய படங்கள், நூல்கள் போன்றவை

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

- வரலாற்றுக்கு முற்பட்ட கால, முன்வரலாற்றுக்கால மற்றும் வரலாற்றுக்காலக் குடியேற்றங்கள் தொடர்பான தகவல்களை முன்வைப்பார்.
- பண்டைய மூதாதையர் அடைந்த வெற்றிகளை மதிப்பார்.
- வரலாற்றுக்கு முற்பட்ட கால, முன்வரலாற்றுக்கால, வரலாற்றுக்கால குடியேற்றங் களுக்கு இடையிலான வேறுபாடுகளை எடுத்துக்காட்டுவார்.
- கட்டுரை எழுதும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்களைப் பின்பற்றுவார்.
- உரிய காலத்தில் ஆக்கத்தை நிறைவு செய்து ஒப்படைப்பார்.

**தேர்ச்சி மட்டம்**

2.2. சவால்களை எதிர்கொண்டு, இயற்கைச் சூழலுடன் ஒன்று கலந்து, புதிய நாகரிகமொன்று கட்டியெழுப்பப்பட்ட விதத்தை எடுத்துக் காட்டுவார்.

**பாடவேளைகள் : 03**

**கற்றற்பேறுகள்**

- வரலாற்றுக் காலம் என்பதை விளக்குவார்.
- வரலாற்றுக் காலக் குடியேற்றங்களைத் தேசப்படமொன்றில் குறித்துக்காட்டுவார்.
- வரலாற்றுக் காலத்தில், பொதுமக்கள் சவால்களை வெற்றி கொண்ட விதத்தை விவரிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**2.2. வரலாற்றுக் காலம்**

இலக்கிய மூலாதாரங்களால் விவரிக்கப்படும் பண்டைய காலம் வரலாற்றுக்காலம் எனப்படுகின்றது. இலங்கையில் கி.மு 450 தொடக்கம் கி.பி 300 வரையிலான காலமே வரலாற்றுக் காலமாகக் கருதப்படுகிறது.

**வரலாற்றுக்காலக் குடியேற்றங்கள்**

- குடியேற்றங்களின் பரம்பலின் மீது பங்களிப்புச் செய்த காரணிகள்
  - புவியியல் - பௌதிகப் பின்னணி
  - மழை வீழ்ச்சி
  - மண்
  - இயற்கை வளங்கள்
  - நீர் வடிப்பு

- குடியேற்றங்களின் தன்மையும் அமைப்பும்
  - கிராமியக் குடியேற்றங்கள்
  - நகரக் குடியேற்றங்கள்
- ஆரம்ப வரலாற்றுக்கால குடியேற்றங்கள் நதிக்கரைகளை அண்டிய பிரதேசங்களில் பரவியமை

- குளத்தை மையமாகக் கொண்டு வளர்சியடைந்த கிராமங்கள் “வாபீ கிராமங்கள்” (குளக் கிராமங்கள்) என இலக்கிய மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளமை.
- குடியேற்ற வகைகள்
  - வெவ்வேறு தொழில்களையும் செயல்களையும் அடிப்படையாகக் கொண்டு கிராமங்கள் தோன்றிய விதத்தை உதாரணங்காட்டி விளக்குதல்.

- குடியேற்றங்களின் அமைப்பு
  - பொதுவாக ஒரு கிராமத்தில் ஐந்து அல்லது ஆறு குடும்பங்கள் இருந்தமை, ஏறத்தாழ முப்பது குடும்பங்களைக் கொண்ட பெரிய கிராமங்களும் காணப் பட்டமை
  - சில கிராமங்கள் குளத்தினால் பாதுகாக்கப்பட்டிருந்தமை (பரிகித்தை கிராமங்கள்)
- நகரக் குடியேற்றங்கள் தோன்றியமை
  - நகரங்கள் தோன்றியதன் பின்னணி
  - நகரக் குடியேற்றங்கள்
    - * நகரம் என்பது திட்டமிடப்பட்ட குடியேற்றமாகும்.

      உதாரணம் : மன்னன் பண்டுகாபயனின் நகரவாக்கம்
      அநுராதபுர நகரத்திட்டம்

- பிழைப்பு முறை
  - மேட்டுநிலக் கமத்தொழில், சேற்றுநிலக் கமத்தொழில்

- தொழினுட்பம்
  - மழைநீரைச் சேகரிப்பதற்காக குளங்கள் அமைத்தல்
  - நீர்ப்பாசனக் கால்வாய்களை அமைத்தல்

- ஆரம்ப வரலாற்றுக்கால மக்கள் எதிர்நோக்கிய சவால்கள்:
  - அதிகரிக்கும் சனத்தொகைக்கு உணவு உற்பத்தி செய்தல்.
  - நீரைச் சேர்த்து வைத்தலும் விநியோகித்தலும்
  - வெள்ளம்
  - சனத்தொகை அதிகரிப்பு
  - நீர் முகாமை

மேற்படி பாடப்பகுதிகளை உள்ளடக்கும் வகையில் இலங்கைப் புறவுருவப்படத்தில் குறித்தல்.

- இதனை ஒரு குழுச் செயற்பாடாக நடத்துங்கள்.
- வகுப்பு மாணவர்களை குழுக்களாகப் பிரித்து ஒரு பிரதி வீதம் வழங்குவதற்காக போதுமான தொகை நதிகள் குறிக்கப்பட்ட இலங்கைப் புறுவுருவப்படங்களை தயார்படுத்திக் கொள்ளுங்கள்.
- இணைப்பு - 1இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப்பத்திரத்தை குழுக்களுக்கு வழங்கி, இலங்கைப் புறவுருவப்படத்தில் இடங்களை குறிக்குமாறு வழிப்படுத்துங்கள்.

**பிரதான சொற்கள் / எண்ணக்கருக்கள்**

- வரலாற்றுக் காலம் - எழுத்து மூல மற்றும் தொல்பொருளியல் காரணிகள் மீது கட்டியெழுப்பப்பட்ட காலம்
- நீர் முகாமைத்துவம்- கிடைக்கும் நீரைச் சிக்கனமாக முறைமையான திட்டத்தின் படி பகிர்ந்து பயன்படுத்துதல்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

**இணைப்பு : 1**

**செயற்படிவம் : 1**

- முன்வரலாற்று, மற்றும் வரலாற்றுக்கு முந்திய காலக் குடியேற்றங்களின் பரம்பலை இலங்கைப் புறவுருவப்படமொன்றில் குறித்துக் காட்டுக.
- ஒரு காலத்துக்கு ஒரு நிறம் வீதம் இரண்டு நிறங்களைப் பயன்படுத்துக.
- குடியேற்றங்களின் பரம்பல் பற்றி விளக்குக.

**செயற்படிவம் : 2**

- வரலாற்றுக் காலக் குடியேற்றங்களை இலங்கைப் புறவுருவப்படமொன்றில் குறித்துக் காட்டுக.
- குடியேற்றங்களின் பரம்பல் பற்றி விளக்குக.

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

- இலங்கையின் குடியேற்றங்களைப் பெயரிடுவார்.
- தலைப்புக்களுக்கமைய இடங்களைப் பெயரிடுவார்.
- தேசப்படங்களில் இடங்களை குறிப்பதற்காக உரிய முறைகளைக் கையாள்வார்.
- குழுவுணர்வுடன் செயற்படுவார்.
- முன்வந்து செயற்படுவார்.

## 10.3 இலங்கையில் அரசியல் அதிகார வளர்ச்சி

இலங்கையில் அரசியல் அதிகாரம் வளர்ச்சியடைந்த முதலாவது சந்தர்ப்பமாக, அதிகாரமானது பிரதேச பிரமுகர்களின் கையில் பன்முகப்பட்டுக் காணப்பட்ட காலத்தைக் குறிப்பிடலாம். அதன்பின்னர் 'அரசு' எனும் அமைப்பு உருவாகியது. அது ஒரு நீண்ட சவால் கொண்ட முறையாகும். உள்நாட்டில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் சருவதேச ரீதியாக வணிகத்துடன் தொடர்புபட்டமை ஆகிய காரணங்கள் பிரதானமாக அதற்குக் காரணமாகின. அது தொடர்பாக இந்த அலகினூடாகக் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது.

**தேர்ச்சி**

நாட்டில் அரசியல் அதிகார வளர்ச்சிக்கான காரணங்களை நுணுகியாய்வார்.

**தேர்ச்சி மட்டம்**

3.1 இலங்கையின் ஆரம்பகால சமூகத்தைச் சமநிலையாகப் பேணிவருவதற்காக அரசியல் அதிகாரம் மையப்படுத்தப்பட்ட விதத்தைத் தேடியறிவார்.

**பாடவேளைகள் : 12**

**கற்றற்பேறுகள்**

- அரசாட்சியின் அடிப்படையை விவரிப்பார்.
- அரசாட்சி எண்ணக்கரு, அரசாட்சி கிடைத்தல், அரசனின் பொறுப்புக்கள் ஆகிய வற்றைப் பகுத்தாராய்வார்.
- இலங்கையின் ஆரம்பகால ஆட்சியாளர் பற்றிய தகவல்களை விவரிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

10.3 இலங்கையில் அரசியல் அதிகார வளர்ச்சி

10.3.1 முன் அரசாட்சிக் காலத்தை விளக்குதல்.

- அரசாட்சியானது ஒழுங்கமைக்கப்பட்ட ஓர் அமைப்பாக உருவாவதற்கு முந்திய காலம்
- சமூகத்தின் மிகச்சிறிய அலகாகிய குடும்பமும் அதன் தலைமையாளர் 'குருகபதி'

- சில குடும்பங்கள் சேர்ந்தது, கிராமம், அதன் தலைமையாளர், 'கமிக்கர்'
- சில கிராமங்கள் சேர்ந்தது, அதன் தலைமையாளர், 'பருமகர்'
- 'பருமகர்' இலங்கையில் அரசியல் அதிகாரத்தின் முதன்மையான சந்தர்ப் பத்தைப் பிரதி நிதித்துவப்படுத்துதல்.
  - குளத்தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 'பருமக்கர்' தோன்றியமை
  - கி.மு 900 களிலிருந்து இந்த நிலைமை வளர்ச்சியடைந்தமை

**அரசாட்சியின் வளர்ச்சியை எடுத்துக்காட்டல்**

- 'பருமக்கர்' அரசன் எனவும் அழைக்கப்பட்டமை
- 'அரச' பெயர் கொண்ட அரசியல் அலகுகள் காணப்பட்டமை

3.2 அரசாட்சியும் அரசனும் பற்றி விபரித்தல்

- அரசாட்சி எண்ணக்கரு
  - பருமக்கர் அரசர்
  - போதிசத்துவர்
  - தேவர்
  - சக்கரவர்த்தி
  - வீரத்துவம்

- அரச உரிமை கிடைத்த விதத்தை விபரித்தல்
  - தந்தையிடமிருந்து மகனுக்கு
  - சகோதரனிடமிருந்து சகோதரனுக்கு
- ஆரம்பகால ஆட்சி நிருவாகத்தை விளக்குதல்
  - அதிகாரிகள்
  - பதவிகள்

3.3 அரசர்கள்

மேற்படி விடய உள்ளடக்கங்கள் அடங்குமாறு, ஆரம்ப காலங்களில் நாட்டை ஆட்சி செய்த அரசர்கள் தொடர்பாக குறு வினாவிடைப் புத்தகமொன்று தயாரித்தல்.

- இதனை ஒரு தனியாள் செயற்பாடாக நடைமுறைப்படுத்துங்கள்.

- பாடநூலிலிருந்து மாத்திரமன்றி வேறு மூலாதாரங்களிலிருந்தும் தகவல்களைப் பெற வழிப்படுத்துங்கள்.

- குறுவினாவிடைப் புத்தகம் தயாரிப்பதற்கு போதிய கால அவகாசம் வழங்குங்கள்.
- அத்தோடு இணைப்பு - 1 இல் தரப்பட்டுள்ள மாதிரிக்கு அமைய கட்டமைப்பு வினாக்கள் தயாரித்து அதனை மாணவருக்கு வழங்கி விடைபெறுங்கள்.

**பிரதான சொற்கள் / எண்ணக்கருக்கள்**

- கமிக்கர் - சில குடும்பங்களைக் கொண்ட ஊரின் பிரதானி
- பருமக்கர் - சில கமிக்கர்களுள் பிரதானி
- அதிகாரப்பரவலாக்கம் : அரசியல் அதிகாரத்தை அந்தந்தப் பிரதேசத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தும் ஆட்களிடம் ஒப்படைத்தல்.
- அதிகார மையப்படுத்தல்: அதிகாரம் ஒரு தனியாளிடத்தே மையப்பட்டுக் காணப்படல்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- அனுராதபுரம் பொலன்னறுவைக்காலம் அரசியல் தொடர்பாக எழுதப்பட்ட நூல்கள், தொல்பொருளியல் காரணிகள்
- இணைப்பு -இல -01 கட்டமைப்பு வினா தயாரிப்பு எடுத்துக்காட்டாகும்.

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

- அனுராதபுரக்கால, பொலன்னறுவைக்கால அரசர்கள் தொடர்பான தகவல்களை முன்வைப்பார்.
- நாட்டுக்காகச் சேவை செய்த அரசர்களை மதிப்பார்.
- பாடவிடயங்கள் யாவும் உள்ளடங்குமாறு வினாக்கள் தயாரிப்பார்.
- பாடநூல்களுடன் வேறு மூலாதாரங்களையும் பயன்படுத்துவார்.
- உரிய காலத்துக்கு நிறைவு செய்து ஒப்படைப்பார்.

**இணைப்பு : 1**

கட்டமைப்பு வினா தயாரிப்பதற்காக மாதிரியொன்று

1. பண்டைய இலங்கையின் அரசியல் அதிகார வளர்ச்சியினது முதலாவது கட்டத்தின் அதிகாரம் பரவலாக்கப்பட்டிருந்தது.
   - i. அதிகாரப்பரவலாக்கம் எவ்வாறு செய்யப்பட்டது? (03 புள்ளிகள்)
   - ii. அக்காலத்தைச் சேர்ந்த பிரதானிகள் இருவகையினரைக் குறிப்பிடுக (04 புள்ளிகள்)
   - iii. அப்பிரதானிகளின் பொறுப்பு ஒவ்வொன்று வீதம் எழுதுக. (05 புள்ளிகள்)
   - iv. அதிகாரப் பரவலாக்கம் காணப்பட்ட காலத்துக்கும், அரசுக்கும் இடையிலான வேறுபாட்டை இரண்டு விடயங்களை முன்வைத்து விளக்குக. (06 புள்ளிகள்)

## 10.4 இலங்கையின் பண்டைய சமூகம்

ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு வினைத்திறனான ஆட்சி இன்றியமையாதது. தனியே ஆட்சியாளரினால் மத்திரம் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது. கூடவே அதனுடன் இணைந்த நிருவாக ஒருங்கமைப்பும் காணப்பட வேண்டும். இலங்கையில் பண்டைய சமூகத்தில் அவ்வாறான நிலைமை காணப்பட்டுள்ளமையை அறிய முடிகின்றது. இந்த அலகின் நோக்கம், எமது பண்டைய சமூகத்தில் காணப்பட்ட நிருவாக ஒழுங்கமைப்பு, பொருளாதாரம், பண்பாடு, இனங்களுக்கு இடையிலான சகவாழ்வு ஆகியன நாட்டின் அபிவிருத்திக்கும் வினைத்திறனான ஆட்சியை நடத்துவதற்கும் துணையாக அமைந்த விதத்தை எடுத்துக்காட்டுவதாகும்.

**தேர்ச்சி**

• கடந்தகால அனுபவங்களின் மூலம் தற்காலத்துக்காக முன்மாதிரிகளைப் பெறுவார்.

**தேர்ச்சி மட்டம்**

4.1 இராசரட்டை நாகரிகத்தின் நிருவாக, சமூக, பொருளாதார தொழிற்பாட்டின் வினைத் திறனை எடுத்துக்காட்டுவார்.

**பாடவேளைகள் : 07**

**கற்றற்பேறுகள்**

- இராசரட்டை நாகரிகத்தின் நிருவாகத்தையும் பொருளாதாரத்தையும் விளக்குவார்
- இராசரட்டைச் சமூகத்தின் வினைத்திறனைப் பகுத்தாராய்வார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

10.4 இலங்கையின் பண்டைய சமூகம்

- **நிர்வாகம்**
  - நிறைவேற்றதிகாரம்
  - சட்டவாக்கம்
  - நீதிமன்றம்
  - வெளிநாட்டுக்கொள்கை

- பொருளாதாரம்

  பிரதானமாக மூன்று அம்சங்களைக் கொண்டது.

  i. விவசாயம்

  ii. கைத்தொழில்

  iii. வணிகம்

  i. விவசாயம்

  - பிரதான சீவனோபாய வழி
  - விவசாயம் மூன்று பகுதிகளிலானது
    - சேனைப் பயிர் வளர்ப்பு (மேட்டு நிலப்பரப்பின் வளர்ப்பு)
    - நீர்ப்பாசன பயிர் வளர்ப்பு (சேற்று நிலப்பரப்பின் வளர்ப்பு)
    - விலங்கு வளர்ப்பு

  - சேனைப் பயிர்ச் செய்கை
    - சேனைப் பயிர் வளர்ப்பின் போது சூழலுக்கு இசைவானவாறு சேனை தயார்ப்படுத்துதல்.
    - செய்கை பண்ணிய பயிர்கள்
    - சேனைப் பயிர் வளர்ப்புக்கான வரி அறவீடு

  - நீர்ப்பாசன பயிர்ச் செய்கை
    - பயிரிடும் விதம் (பொருத்தமான காலத்திற்கு)
    - போகங்களுக்கு அமைய பயிரிடுதல்
    - நீர் பெறுதலும் அரச அனுசரணையும்
    - வரி அறவிடல்

  - விலங்கு வளர்ப்பு
    - பொருளாதாரத்தின் முக்கியமானதோர் இடம் விலங்கு வளர்ப்புக்குக் கிடைத்தமை
      - வளர்த்த விலங்குகள்
      - பெற்ற பயன்கள்

  ii. கைத்தொழில்கள்

  - பல்வேறு கைத்தொழில்கள் காணப்பட்டமை
  - கைத்தொழில்சார்ந்த நுட்ப வினைஞர்கள்
  - கைத்தொழில்களை முதன்மையாகக் கொண்ட கிராமங்கள்
  - கைத்தொழில்களில் வினைஞர்கள் தலைமுறை தலைமுறையாக வருதல்.
  - வெவ்வேறு கைத்தொழிச் சார்ந்த உபகரணங்கள்.

i வணிகம்

- பிரதானமாக இரண்டு பிரிவுகள்
  – உண்ணாட்டு வணிகம்
  – வெளிநாட்டு வணிகம்

**உண்ணாட்டு வணிகம்**

- பண்டப் பரிமாற்றம் பரவலாக நிகழ்ந்தமை
- வணிகத்தரங்கள், வணிக நகரங்கள், வணிகக் கிராமங்கள், வியாபார நிலையங்கள் காணப்பட்டமை
- நகரங்களை இணைக்கும் பாதைத் தொகுதி
- வணிகம் தொடர்பான அதிகாரிகள்
- வணிகச் சட்டங்கள்

**வெளிநாட்டு வணிகம்**

- வெளிவாரி வணிகத்துக்காக இலங்கை அமைவின் முக்கியத்துவம்
- சர்வதேச வணிகத்துடன் இலங்கை தொடர்புற்றமை
  - வணிகம் செய்த நாடுகள், பண்டங்கள்
  - துறைமுகங்கள்

- வணிக ஊடகம்
  - பண்டப்பரிமாற்றம்
  - பணம்

- வரி அறவிடல்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- திட்மிடப்பட்ட பாடத்திற்கு அமையத் தேவையான பொருட்களைத் தயார் செய்து கொள்ளவும்.

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

- பாடத்துக்குப் பொருத்தமானவாறு கற்றற்பேறுகள் அளக்கப்படும் வகையில் நியமங்களைத் தயாரித்துப் புள்ளி வழங்குங்கள்.

**தேர்ச்சி மட்டம்**

10.4.2 இராசரட்டை நாகரிகத்தின் மக்கள் வாழ்க்கையினால் பிரதிபலிக்கப்படும் விழுமியங்களின் தனித்துவத்தைக் காப்பார்.

**பாடவேளைகள் : 05**

**கற்றற்பேறுகள்**

- இராசரட்டை நாகரிகத்தின் பண்பாட்டுத் தகவல்களை விவரிப்பார்.
- பண்டைய பொதுமக்கள் இனங்களுக்கிடையிலான சகவாழ்வுடன் வாழ்ந்தமையை எடுத்துக்காட்டுவார்.
- நல்லொழுக்கம் மற்றும் இன சகவாழ்வுக்காக வரலாற்றில் இருந்து முன்மாதிரிகள் பெறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

4.2.1 பண்பாடு

- சமயம்
  - பௌத்த சமயம்
    - விவசாயம் மக்கள் வாழ்க்கையுடன் இணைந்து காணப்பட்டமை
      * அரச அனுசரணை
  - ஏனைய சமயங்கள்

- கல்வி
- பன்னசாலையும் பிக்குமார் ஊடாக பரம்பிய கல்வியும்
- பிரிவெனாக்கல்வி - பல்கலைக்கழக மட்டத்தில் காணப்பட்டமை.
- சோதிடம், போர்க்கலை, வானியல், தருக்க சாஸ்திரம், கணிதம் போன்ற பாடங்களும் காணப்பட்டமை

- இலக்கியம்
  - பாலி, சமஸ்கிருத மற்றும் சிங்கள இலக்கியங்கள்
  - உரைநடை, செய்யுள் இலக்கியப்படைப்புக்கள்

இனங்களுக்கு இடையிலான சகவாழ்வு

- சமூகத்தில் வெவ்வேறு மக்களினங்கள் காணப்பட்டமையை விளக்குதல்
  அம்மக்களினங்கள் இணக்கத்துடன் செயற்பட்டமை
  - ஆட்சியாளர்களாக
  - படைவீரர்களாக
  - அரச அதிகாரிகளாக
  - பௌத்தர்களாக
  - திருமணத் தொடர்புகள்

- மேற்படி விடயங்கள் உள்ளடங்குமாறு இலங்கையின் பண்டைய சமூகம் தொடர்பான குறுவினாவிடைப் புத்தகமொன்று தயாரித்தல்.
  - இதனை தனியாள் செயற்பாடாக நடைமுறைப்படுத்துங்கள்.
  - ''இலங்கையின் பண்டைய சமூகம்'' எனும் பாடத்தைத் தழுவி குறுவினாக்களையும் அவ்வினாக்களுக்குரிய விடைகளையும் உள்ளடக்கிய சிறிய புத்தகமொன்று தயாரிக்குமாறு அறிவுறுத்தல் வழங்குங்கள்.
  - நூலைத் தயாரிப்பதற்காக ஏறத்தாழ ஒருவார கால அவகாசம் வழங்குங்கள்.
  - மாணவரது செயற்பாட்டை மதிப்பிடுங்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- இராசரட்டை நாகரிகத்தின் சமூகம் பற்றி எழுதப்பட்ட நூல்கள்

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

பின்வரும் நியமங்களின்படி கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துங்கள்.

- இலங்கையின் பண்டைய சமூகம் தொடர்பான தகவல்களை முன்வைப்பார்.
- இலங்கையின் பண்டைய சமூகம் தொடர்பான சரியான தகவல்களைக் கொண்டு வினாக்கள் தயாரிப்பார்.
- பண்டைய சமூகத்தின் நற்பண்புகளை மதிப்பார்.
- பாடத்தின் சகல பகுதிகளும் உள்ளடங்கும் வகையில் வினாக்கள் தயாரிப்பார்.
- உரிய நேரத்தில் ஒப்படைப்பார்.

## 10.5 இலங்கையின் புராதன விஞ்ஞானமும் தொழினுட்பமும்

இயற்கையின் தொழிற்பாட்டுக்கு ஏதுவாகும் கோட்பாடுகளை விளங்கிக் கொள்வதும் அவற்றுக்குப் பொருள் விளக்கமளிக்கப்பதும் விஞ்ஞானத்தின் பணியாகும். அவ்வாறாக விளங்கிக் கொண்ட விஞ்ஞான எண்ணக்கருக்களைப் பயன்படுத்துவதற்காகப் பிரயோகிக்கப்படும் பிரயோக உத்திகளை தொழினுட்பம் எனப்படுகின்றது. விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம் எனும் அர்த்தத்தில் கலந்துரையாடப்பட்ட போதிலும் பெரும் பாலான பண்டைய சமூகங்கள், இயற்கையின் கோட்பாடுகளை விளங்கி, அவற்றைத் தமது நாளாந்த வாழ்க்கையில் பயன்படுத்திக் கொண்டுள்ளனர். அவ்வாறான கருத்துக்களின் தன்மை, அவற்றை நடைமுறையில் பயன்படுத்திய விதம் ஆகியன பற்றி விளக்குவதும் அதன் மூலம் எனது வரலாற்று அருஞ்செல்வங்களாகக் காணப்படும் விஞ்ஞான தொழினுட்ப அறிவை வலியுறுத்துவதுமே இந்த அலகின் மூலம் எதிர்பார்க்கப்படுவதாகும்.

**தேர்ச்சி**

இலங்கையின் பெருமையை உலகிற்கு வெளிக்காட்டிய தமது மூதாதையர்களின் விஞ்ஞான அறிவு மற்றும் தொழினுட்ப திறன்களின் மகிமையைக் கற்று அவ்வாறான திறன்களை விருத்தி செய்துகொள்வார்.

**தேர்ச்சி மட்டம்**

5.1 விஞ்ஞானம், தொழினுட்பம் மற்றும் அவற்றின் பிரயோகத்தில் சுதேச தனித்துவம் உண்டு என்பதை விளங்கி அதனைப் பகுத்தாய்வார்.

**பாடவேளைகள் : 02**

**கற்றற்பேறுகள்**

- பிரயோக விஞ்ஞானத்தின் ஆரம்பக் கட்டங்களை விளக்குவார்.
- முன்வரலாற்றுக் காலத்தில் விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம் மூலம் எடுத்துக் காட்டப்படும் சுதேச தனித்துவத்தைப் பகுத்தாய்வார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

10.5 இலங்கையின் புராதன விஞ்ஞானமும் தொழினுட்பமும்

5.1 பிரயோக விஞ்ஞானத்தின் ஆரம்பக் கட்டங்கள்

- விஞ்ஞானம், தொழினுட்பம் ஆகியவற்றால் கருதப்படுவது யாது என விளக்குதல்.
- தற்போது கண்டறியப்பட்டுள்ளதற்கிணங்க, இலங்கையில் காணப்பட்ட விஞ்ஞானக் கருத்துக்கள் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்காக பின்பற்றிய தொழினுட்ப அணுகுமுறைகள் ஆகியவற்றின் வரலாறு கி.மு 2000 அளவு பழமையான காலத்துக்கு உரியவையாகும் என்பதை விளக்குதல்.

- முன் வரலாற்றுக்காலம் எனவும், பிரயோக விஞ்ஞானத்தின் தொடக்கக்கட்டம் எனவும் அறிமுகஞ் செய்தல்.

* முன்வரலாற்றுக் காலத்தைச் சேர்ந்த விஞ்ஞானமும் தொழினுட்பமும் பிரதி பலிக்கப்படும் சந்தர்ப்பங்கள்

- புராதன களிமண்ணாலான ஓடவடிவமுடைய புதைகுழிகள்
- களிமண்ணாலான சுவர்கள் நிலத்துக்குச் செங்குத்தாக அமைக்கப்பட்டிருத்தல்
- களிமண்ணாலான சுவர்களின் தடிப்புக்கும் உயரத்துக்கும் இடையிலான தொடர்பு
- வெய்யிலில் உலர்த்திய மண்ணாலான அரிகற்களும், அக்கற்களைக் கொண்டு கட்டுவதற்கு களிமண்சாந்தும் பயன்படுத்தப்பட்டமையும்
- எரிதலுக்கு (தகனத்துக்கு) வளி தேவை என்பது பற்றி அறிந்திருந்தமை
- வீடு கட்டுவதற்காக கற்களைப் பயன்படுத்தியமை
- கற்களைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட வீடுகள்
- வனைவோன் சில்லு
- களிமட்பாண்டங்களுக்கு நிறமூட்டல்

- முன்வரலாற்றுக் காலத்தில் பயன்படுத்தப்பட்ட விஞ்ஞானம், தொழினுட்பம் மூலம் சுதேச தனித்துவம் பிரதிபலிக்கப்படும் விதத்தை உதாரணங்காட்டி விளக்குதல்.

"தமது மூதாதையரின் விஞ்ஞான அறிவும் தொழினுட்பத்திறன்களும்" எனும் தலைப்பில் செய்தித்தாளொன்றுக்கு கட்டுரை எழுதுதல்.

- வரலாற்றுக்கு முற்பட்ட கால விஞ்ஞான அறிவு மற்றும் அவற்றின் பயன்பாடு பற்றி மாணவருடன் கலந்துரையாடுங்கள்.
- பாடத்தின் இறுதியில், எமது மூதாதையரின் விஞ்ஞான அறிவும் தொழினுட்பத் திறன்களும் எனும் தலைப்பில் செய்தித்தாளொன்றில் பொருத்தமான ஒரு கட்டுரை தயாரிக்க அறிவுறுத்தல் வழங்குங்கள்.
- அக்கட்டுரை ஆக்கபூர்வமான வகையில் தயரிப்பதற்காக படங்கள், சித்திரங்கள், ஒளிப்படங்கள் போன்றவற்றையும் பயன்படுத்துமாறு அறிவுறுத்தல் வழங்குங்கள்.
- செயற்பாட்டுக்காக போதிய கால அவகாசம் வழங்குங்கள்.

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

கணிப்பீடு, மதிப்பீட்டைப் பற்றி பின்வரும் நியமங்களின்படி நடத்துங்கள்

- முன்வரலாற்றுக் காலத்தைச் சேர்ந்த விஞ்ஞானம், தொழினுட்பம் ஆகியவற்றை விவரிப்பார்.
- முன் வரலாற்றுக்காலத்தைச் சேர்ந்த விஞ்ஞானம், தொழினுட்பம் ஆகியவற்றின் சுதேச தனித்துவத்தை மதிப்பார்.
- செய்தித்தாள் கட்டுரை வடிவில் ஆக்கத்தைத் தயாரிப்பார்
- கட்டுரையை ஆக்கபூர்வமாகத் தயாரிப்பார்.
- குறித்த தினத்தில் ஒப்படைப்பார்.

**தேர்ச்சி மட்டம்**

5.2 வரலாற்று யுகத்திற்கு உரிய விஞ்ஞான, தொழினுட்ப அறிவு முறைமைகளின் அருஞ்செல்வங்களைக் காத்து அவ்வாறான திறன்களை விருத்தி செய்து கொள்வார்.

**பாடவேளைகள் : 16**

**கற்றற்பேறுகள்**

- வரலாற்றுக் காலத்தின் விஞ்ஞான மற்றும் தொழினுட்பப் பயன்பாட்டையும் அதன் முதிர்ச்சியையும் பகுத்தாய்வார்.
- வரலாற்றுக் காலத்தைச் சேர்ந்த விஞ்ஞான, தொழினுட்ப, அறிவை விவரிப்பார்.
- வெவ்வேறு துறைகள் தொடர்பாக பண்டைய மக்கள் வசமிருந்த அறிவுப் பொக்கிசங்களைத் தற்கால மக்கள் தமது வாழ்க்கையை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்குப் பயன்படுத்தக்கூடிய முறையை எடுத்துக்காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

5.2 விஞ்ஞான பிரயோக முதிர்ச்சியை வரலாற்றுக் காலத்திற்கமையக் கலந் துரையாடுக.

- வரலாற்றுக்கால பண்டைய மனிதன் பயன்படுத்தும் தொழினுட்பத்தையும், விஞ்ஞான அறிவையும் வெளிக்கொணரும் வகையில் கலந்துரையாடுதல். பின்வரும் அம்சங்களின் கீழ் உதாரணங்களை முன்வைக்குக.

• நீர்முகாமை

- கலிங்கத் தொட்டி உட்பட குளத்துடன் இணைந்த தொழினுட்பம்
- கால்வாய் அமைப்புத் தொழினுட்பம் இலங்கை நீர்ப்பாசனத் தொழினுட்பம்
- சிகிரியா நீர்ப் பூங்கா

- கட்டடக்கலை
  - கட்டட நிர்மாணம்
  - சிற்பங்களும் செதுக்கு வேலைப்பாடுகளும்
  - நகரவாக்கம்
  - பூங்காவாக்கம்

- உடனலப்பாதுகாப்பு, சுகாதார, மருத்துவமுறைகள்
  - கழிவுப்பொருள் முகாமை
  - மலசலகூடப் பயன்பாடு
  - சத்திரசிகிச்சை உபகரணங்கள், ஔடத ஓடம் (மருந்து ஓடம்)
  - வைத்தியசாலைகள்
  - மருத்துவ நூல்கள்

- சிறு கைத்தொழில்கள்
    - உலோகக் கைத்தொழில்
    - பல்வேறு வகை ஆபகரணங்கள் செய்தல்
    - புடக்குகைப் பயன்பாடு மூலம் ஆபரணம் தயாரித்தல்
    - மட்பாண்டக் கைத்தொழில்
    - வனைவோன் சில்லின் தொழிற்பாடு
    - இரத்தினக் கல் கைத்தொழில்
    - கொல்லர் பட்டறைத்தொழில்
    - ஊதுருத்தி செயற்படும் விதம்
    - அபிசார முறைகள்
    - மாந்திரீக முறைகள்
    - சுதேச அறிவு

- வரலாற்றுக்காலத்தைச் சேர்ந்த விஞ்ஞான, தொழினுட்ப அறிவுத் தொகுதி களின் சுதேச தனித்துவத்தை விளக்குங்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- திட்மிடப்பட்ட பாடத்திற்கு அமையத் தேவையான பொருட்களைத் தயார் செய்து கொள்ளவும்.

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

- பாடத்துக்குப் பொருத்தமானவாறு கற்றற்பேறுகள் அளக்கப்படும் வகையில் நியமங் களைத் தயாரித்துப் புள்ளி வழங்குக.

## 10.6. வரலாற்று அறிவும் அதன் நடைமுறைப் பிரதியீடும்

எந்தவொரு சமூகமும் அறிவை அடிப்படையாகக் கொண்டே சமனிலையில் காணப் படும். அச்சமூகம் அமைந்துள்ள இயற்கைச் சூழலுக்கும் அதற்கு அமைவாக வாழும் போது உருவாகும் பண்புக்கும் இசைவான வகையிலேயே அவ்வறிவு கட்டியெழுப்பப் படும். எனவே உலகெங்கும் பரவியுள்ள சமூகங்களில் ஒன்றுக்கொன்று வேறுபட்ட அறிவுத்தொகுதிகள் காணப்படுகின்றன. அவ்வொவ்வோர் அறிவுத் தொகுதியும், அது சார்ந்துள்ள சமூகத்தின் உற்பத்தி வினைத்திறனையும்,பேண்தகு இருப்பையும் உறுதிப்படுத்தும். யாதேனும் சமூகத்தினால் உருவாக்கப்படும் அறிவு தொடர்பான கட்டமைப்பானது பல்வேறு வெட்டுமுகங்களைக் கொண்டிருக்கும். தமது சமூகத்தை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்குத் தேவையான பெறுமானங்கள், பொருளா தார பரிமாற்றங்களை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்குத் தேவையான நடைமுறைப் படிமுறைகளின் பெறுமானங்கள், நம்பிக்கைகள் போன்றவை அவற்றுள் சிலவாகும். வரலாற்றுச் சமூகத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட, அவ்வாறான அறிவுக் கட்டமைப் புக்கள் தற்கால சமூகத்துக்குக்கூட அனுபவங்களை வழங்குகின்றன. இதுவே பண்பாட்டு அருஞ்செல்வம் எனப்படுகின்றது. இலங்கையின் பண்பாட்டு அருஞ் செல்வங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட ஆறு எண்ணக்கருக்கள் தொடர்பாக மாணவரிடத்தே உணர்வை ஏற்படுத்துவதன் மூலம் வரலாற்று அறிவுடைய பிரசை களை உருவாக்குவதன் முதன்மையான அடித்தளத்தை அமைக்கும் நோக்குடனேயே இப்பாடம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இலங்கையின் புராதன சமூக ஒழுங்கமைப்பு, சட்டமும் பாரம்பரியமும், பணமும் செலாவணியும், சூழல் பாதுகாப்பும் பெண்களின் பங்களிப்பும், சுதேச உணவு ஆகியன இந்த எண்ணக்கருக்களில் அடங்கியுள்ளன.

### தேர்ச்சி

இலங்கையின் வரலாற்று மக்கட் சமூகத்தினால் கிடைக்கப்பெற்ற தூரநோக்கு மற்றும் பாரம்பரியங்கள் பற்றிய விளக்கத்தினைப் பெற்று அவற்றினைத் தமது வாழ்க்கையை நெறிப்படுத்திக் கொள்வதற்குப் பயன்படுத்துவார்.

### தேர்ச்சி மட்டம்

எமது முதாதையர்கள் ஊடாக எமக்கு உரித்தான சமூக தூரநோக்கு மற்றும் பொது வழக்காறுகளை, அர்த்தமுள்ள சமூகமொன்றினைக் கட்டியெழுப்பப் பிரயோகிக் கத்தக்க விதத்தை எடுத்துக்காட்டுவார்.

**பாடவேளைகள் : 10**

**கற்றற்பேறுகள்**

- வரலாற்று மக்கட் சமூகத்தின் ஊடாகக் கிடைத்த சமூக நோக்கு மற்றும் பொது வழக்காறுகளை விளக்குவார்.
- சமூக நோக்கையும், பொது வழக்காறுகளையும் நடைமுறையில் பிரதியீடு செய்த விதத்தை விவரிப்பார்.
- தற்காலத்தில் அர்த்த புஷ்டியான சமூகமொன்றினைக் கட்டியெழுப்புவதற்காக வரலாற்று அறிவைப் பயன்படுத்தத்தக்க விதத்தை எடுத்துக்காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிடுவார்.

**10.6 - வரலாற்று அறிவும் அதன் நடைமுறைப் பிரதியீடும்.**


**10.6.1 சமூக அமைப்புக்கள்**

- சமூக அமைப்புக்கள் என்பதை விளக்குக.
  - சமூகத்தில் வாழும் தனியாள்களுக்கும் குழுக்களுக்கும் இடையில் காணப்படும் தொடர்புகளின் தன்மை

- சமூக ஒழுங்கமைப்பின் அவசியம்
  - வெற்றிகரமான அமைதிபேணும் சமூகமொன்றினைக் கட்டியெழுப்புதல்.

- சமூக அமைப்பொன்றின் பிரதான இயல்புகள்
  - சமூகத்தில் ஆட்களுக்கு இடையிலான தொடர்புகளின் ஒழுங்குமுறை
  - நிலைக்குத்தான அடுக்கமைப்பும்
    கிடையான அடுக்கமைப்பும்

- பண்டைக்காலத்தில் இலங்கையில் காணப்பட்ட சமூக அமைப்பின் தன்மையைப் பின்வரும் மாதிரி மூலம் விளக்குக.




- சமூக ஒழுங்கமைப்பின் உச்சியில் அரசன்
- இரண்டாவது இடத்தில், பௌத்த சங்கத்தினர் அரச உயர் அதிகாரிகள், பிரபுக்கள் (தனவந்த வர்த்தகர்கள், வைத்தியர்கள், ஆசிரியர்)
- அரசின் உயர் மட்டத்தினருக்கும் சாராதண மக்களுக்கும் இடையே தொடர்பைக் கட்டியெழுப்பிய இடைநிலைப் பிரிவினர்
- சராசரி மக்களும் அதிலும் கீழ்மட்ட வேலையாட்களும்

- சமூக அடுக்கமைப்பின் அந்தந்தக் குழுவின் பொறுப்புக்களும் நற்சமூகமொன்றினைக் கட்டியெழுப்புவதில் அக்குழுக்கள் பங்களிப்புச் செய்த விதமும்.
- புராதன சமூக ஒழுங்கமைப்பின் மூலம் தற்காலத்துக்காக பெறத்தக்க முன்மாதிரிகள்

**6.2 சட்டமும் சம்பிரதாயங்களும்**

- சட்டம், சம்பிரதாயம் என்பவற்றை விளக்குங்கள்
- சட்டங்கள், சம்பிரதாயங்களின் தேவையை விளக்குங்கள்
- இலங்கையின் புராதன யுகத்தைச் சேர்ந்த சட்டதிட்டங்கள்
  - நீதிமன்றத் தொகுதிகள்
  - சுற்றாடல் பாதுகாப்புச் சட்டதிட்டங்கள்
  - விவசாய நடவடிக்கைகளுக்குரிய சட்டதிட்டங்கள்
  - கொலை, களவு தொடர்பான சட்டதிட்டங்கள்

- புராதன சட்டங்களும், சம்பிரதாயங்களும் நற்சமூகமொன்றினை கட்டியெழுப்ப பங்களிப்புச் செய்யும் விதத்தை விளக்குக.

**6.3 பணமும் செலாவணியும்**

- பணம், செலாவணி என்பவற்றை விளக்குதல்
- நாணயப் பயன்பாட்டின் ஆரம்பம்
- பண்டைய நாணயங்கள்
- வங்கி முறை
- உலோகத்தின் நிறையை செலாவணி அலகாகக் கொண்டமை

**6.4 பெண்களின் பங்களிப்பு**

- பண்டைய சமூகத்தில் பெண்களின் கருமங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
  - பெண்களை உயர்வாக மதித்தலும் கௌரவித்தலும்
  - அரசிகளாக, தலைவிகளாக இருந்த பெண்கள்
  - பெண்களின் அர்ப்பணிப்பு

**6.5 சூழலைக் காத்தல்**

- சூழலைக் காப்பதன் அவசியம்
- சூழல் காப்பு முறைகள்
- தற்கால சூழற்காப்புக்காக பின்பற்றப்பட்ட முறைகள் பற்றி விளக்குங்கள்
- தற்காலத்தில் சுற்றாடற் காப்புக்காக எடுத்துக்கொள்ளத்தக்க முன்மாதிரிகள்

* பண்டைக்காலத்தில் கையாண்ட சுற்றாடல் பாதுகாப்பு முறைகளைத் தற்காலத் துக்காக பொருத்தமானதாக்கிக் கொள்ளத்தக்க விதத்தை எடுத்துக்காட்டுக.

**6.6 சுதேச உணவுகள்**

- தானிய வகைகள்
- கூழ் / கஞ்சி
- கிழங்கு வகை
- காய்கறிகள், பழவகைகள்
- ஆரோக்கிய வாழ்க்கைக்கும், உணவுக்கும் இடையிலான தொடர்பு
- உணவின் போசணைப் பண்புகள் குறித்துக் கலந்துரையாடுக.
- நோய்களுக்கு ஆளாவதைத் தவிர்ப்பதற்காக பண்டைய உணவு முறைகள் மூலம் பெறத்தக்க முன்மாதிரிகளை எடுத்துக்காட்டுக.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

திட்டமிடப்பட்ட பாடத்துக்கு அமையத் தேவையாயன பொருட்களைத் தயார் செய்து கொள்ளவும்.

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

- பாடத்துக்குப் பொருத்தமானவாறு கற்றற்பேறுகள் அளக்கப்படும் வகையில் நியமங் களைத் தயாரித்துப் புள்ளி வழங்குங்கள்.

## 10.7. உலர் வலய பண்டைய நாகரிகங்களின் வீழ்ச்சி

அந்தந்தக் காலப்பகுதிகளில் நாட்டின் உள்வாரி மற்றும் வெளிவாரி தேவைகளையும் அவற்றை நிறைவேற்றிக் கொள்வதற்கான வசதிகளையும் அடிப்படையாகக் கொண்டு, நாட்டில் நகரங்கள் தோன்றுவதும் பின் வீழ்ச்சியடைவதும் நிகழுவதுண்டு. இலங்கை உலர் வலயத்தில் நகரங்கள் தோன்றுதல், அவை வீழ்ச்சியடைதல், படிப்படியாக ஈரவலயத்தை நோக்கி நகரங்கள் பெயர்ந்தமை ஆகியவற்றை மேற்படி விடயங்களின் ஊடாகப் பகுத்தாய்தலே இந்த அலகின் நோக்கமாகும்.

**தேர்ச்சி**

இராசரட்டை நாகரிகத்தின் தளர்ச்சியும் வீழ்ச்சியும் காரணமாக சமூகத்தின் பல்வேறுபட்ட துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களைப் பகுத்தாய்வார்.

**தேர்ச்சி மட்டம்**

7.1 நீண்ட காலமாகச் செயற்பட்ட இராசரட்டை இராசதானி வீழ்ச்சியடைந்த, அதற்கு அடிப்படையாக அமைந்த காரணிகளை கோவைப்படுத்தி, நிலைபேறாகப் பேணிச் செல்வதற்கு அவசியமான காரணிகளைத் திரட்டுவார்.

**பாடவேளைகள் : 01**

**கற்றற்பேறுகள்**

- நகரங்கள் தோன்றுவதற்கான காரணங்களை விளக்குவார்.
- உலர் வலய பண்டைய நகரங்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு காரணங் காட்டுவார்.
- இராச்சியங்கள் நிலைத்து நிற்பதற்கான காரணங்களைப் பகுத்தாய்வார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**10.7. உலர் வலய பண்டைய நகரங்களின் வீழ்ச்சி**

7.1.1 நகரங்கள் உருவாதல் - முதலாவது நகரமயமாக்கல்
உலர்வலயத்தில் நகரங்கள் உருவாவதில் பங்களிப்புச் செய்த காரணங் களை பின்வரும் விடயங்களின் கீழ் கலந்துரையாடுக.
- உள் நாட்டில் உற்பத்தி வினைத்திறனாக நிகழ்ந்தமை
- உள் நாட்டு, வெளிநாட்டு வணிகம்

7.1.2 பண்டைய நகரங்களின் வீழ்ச்சி

- நகரங்கள் தோன்றுவதிலும் வளர்ச்சியடைவதிலும் பங்களிப்புச் செய்த காரணிகளைப் பின்வரும் விடயங்களின் துணையுடன் விளக்குங்கள்.
    - வணிக மார்க்கங்கள் மாற்றமடைந்தமை
    - வணிக உரிமை தொடர்பாக நாடுகளுக்கிடையிலான போட்டி
    - அண்டை நாடுகளின் அரசியலதிகாரப் பரம்பல்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடத்துக்குப் பொருத்தமானவாறு தரவிருத்தி உள்ளீடுகளைத் தயாரித்துக் கொள்ளுங்கள்.

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

- பாடத்துக்குப் பொருத்தமானவாறு கற்றற்பேறுகள் அளக்கப்படும் வகையில் நியமங்களைத் தயாரித்துப் புள்ளி வழங்குங்கள்.

**தேர்ச்சி மட்டம்**

7.2 ஆட்சி மையங்கள் மாற்றமடைந்த குறுகிய காலப்பகுதிகளில் கூட இந்நாட்டினது சிறந்த ஆட்சியாளர்களினால் நாட்டின் நிலையான தன்மை பாதுகாக்கப்பட்ட விதத்தை விளக்குவார்.

**பாடவேளைகள் : 02**

**கற்றற்பேறுகள்**

- ஆட்சி மையங்கள் மாற்றமடைந்தமையில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளைப் பகுத்தாராய்வார்.
- நிலையாகப் பேணப்பட்ட அரசுகள் தொடர்பான தகவல்களை முன்வைப்பார்.
- வரலாற்று இடங்களை இலங்கைப் புறவரிப்படத்தில் குறித்துக்காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**7.2 இரண்டாம் நகரமயமாக்கல்**

- இரண்டாம் நகரமயமாக்கல் அறிமுகம்
- தோன்றிய பிரதான நகரங்கள்
  - தம்பதெனியா
  - யாப்பகுவை
  - குருணாகல்
  - கம்பளை
  - கோட்டே
  - யாழ்ப்பாணமும் வன்னியார்களும்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடத்துக்குப் பொருத்தமானவாறு தரவிருத்தி உள்ளீடுகளைத் தயாரித்துக் கொள்ளுங்கள்.

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

- பாடத்துக்குப் பொருத்தமானவாறு கற்றற்பேறுகள் அளக்கப்படும் வகையில் நியமங் களைத் தயாரித்துப் புள்ளி வழங்குங்கள்.

**தேர்ச்சி மட்டம்**

7.3 ஆட்சி மையங்கள் மாற்றமடைந்தமையால் பொருளாதாரமும் பண்பாடும் மாற்ற மடைந்த விதத்தைத் தேடியறிவார்.

**பாடவேளைகள் : 02**

**கற்றற்பேறுகள்**

- இரண்டாம் நகரமயமாக்கல் காலத்தின் பொருளாதாரக் கோலத்தை விவரிப்பார்.
- இரண்டாம் நகரமயமாக்கல் காலத்தின் பண்பாட்டு நடவடிக்கைகளை விளக்குவார்.
- இரண்டாம் நகரமயமாக்கல் பொருளாதாரமும் பண்பாடும் மாற்றமடைவதில் செல்வாக்குச் செலுத்திய காரணங்களை விபரிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

7.3.1 பொருளாதார முறை
- விவசாய நடவடிக்கைகளுக்கான மழைநீரைப் பயன்படுத்துதல்.
- வர்த்தகப் பயிர்களின்பால் ஆர்வம் காட்டப்பட்டமையில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளை எடுத்துக்காட்டுக.

7.3.2 சமயம்
- இரண்டாம் நகரமயமாக்கக் காலத்திற் காணப்பட்ட சமயங்கள்
- சமயம் சார்ந்த சேவைகளுக்காக பிரபுத்துவக் குடும்பங்கள் முன்வந்து செயற்பட்டமை

7.3.3 கலையும் கட்டடக் கலையும்
- தென்னிந்திய கட்டட நிர்மாணக் கலையின் செல்வாக்கு காணப்படுதல்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடத்துக்குப் பொருத்தமானவாறு தரவிருத்தி உள்ளீடுகளைத் தயாரித்துக் கொள்ளுங்கள்.

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

- பாடத்துக்குப் பொருத்தமானவாறு கற்றற்பேறுகள் அளக்கப்படும் வகையில் நியமங் களைத் தயாரித்துப் புள்ளி வழங்குங்கள்.

**தேர்ச்சி மட்டம்**

7.4 இரண்டாம் நகரமயமாக்கக் காலத்தில் இலக்கியத்துறையில் ஏற்பட்ட விருத்தியினைக் எடுத்துக்காட்டுவார்.

**பாடவேளைகள் : 01**

**கற்றற்பேறுகள்**

- இரண்டாம் நகரமயமாக்கல் காலத்தின் இலக்கியத் தகவல்களை விளக்குவார்.
- இலக்கியத்தில் ஏற்பட்ட விருத்திக்கும் மலர்ச்சிக்கும் காரணங்காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

7.4 இலக்கியம்

- தூது இலக்கியங்கள்
  தூது இலக்கியங்கள் என்பதை உதாரணங்காட்டி விளக்குக.
- கல்வி நிலையங்கள் தோன்றியமை
- பொதுமக்களிலும் துறவறம் பூண்டோரிலும் கல்விமான்கள் இருந்தமை
- இலக்கியம் விருத்தியடைந்தமை
  இலக்கிய படைப்பாளர்களின் பங்களிப்பை விளக்குக.

- இரண்டாம் நகரமயமாக்கல் தொடர்பாக, அட்டவணையொன்று பூர்த்தி செய்தல்.

  - இணைப்பு இல- 01 இல் தரப்பட்டுள்ள அட்டவணை மாதிரியைக் கரும்பலகையில் எழுதி அதனைத் தமது பயிற்சிப்புத்தகத்தில் பிரதிசெய்து கொள்ளச் மாணவருக்கு சந்தர்ப்பமளியுங்கள்.
  - பாடநூலையும் வேறு பொருத்தமான மூலாதாரங்களையும் பயன்படுத்தி அட்டவணையைப் பூர்த்தி செய்ய வழிப்படுத்துதல்.
  - செயற்பாட்டைப் பூர்த்தி செய்வதற்காக ஒரு நாள் அவகாசம் வழங்குங்கள்.

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

பின்வரும் நியமங்களின்படி கணிப்பீட்டை, மதிப்பீட்டை நடத்துங்கள்.

- இரண்டாம் நகரமயமாக்கல் தொடர்பான தகவல்களை முன்வைப்பார்.
- ஆட்சியாளர்களின் மேன்மையை மதிப்பார்.
- சரியான தகவல்களை அட்டவணையில் உரிய கட்டங்களில் எடுத்துக் காட்டுவார்.
- வெவ்வேறு மூலாதாரங்களை உசாவுவார்.
- செயற்பாட்டைப் பூர்த்தி செய்து குறித்த தினத்தில் ஒப்படைப்பார்.

**இணைப்பு : 1**

**அட்டவணை**

| காரணி | தம்பதெனியா | யாப்பகுவ | குருணாகல் | கம்பளை | கோட்டை | யாழ்ப்பாணம் வன்னியும் |
|---|---|---|---|---|---|---|
| 1. நகரம் கட்டியெழுப்பப் பட்டமைக்கான காரணம் | | | | | | |
| 2. ஆரம்பகால ஆட்சியாளர் | | | | | | |
| 3. தலைசிறந்த ஆட்சியாளர் | | | | | | |
| 4. முக்கிய நிகழ்வுகள் | | | | | | |
| 5. பொருளாதார நடவடிக்கைகள் | | | | | | |
| 6. கட்டடங்கள் | | | | | | |
| 7. கல்விமான்கள் | | | | | | |
| 8. நூல்கள் | | | | | | |

## 10.8. கண்டி இராசதானி

செங்கடகல நகரத்தை மையமாகக் கொண்டு ஆரம்பித்த கண்டி இராசதானிக்கு அதன் இயற்கை அமைவு பாதுகாப்பு வழங்கியது. இயற்கை எழில் மிக்க இது குளிரான காலநிலையைக் கொண்டது. மூன்று நூற்றாண்டு கால வரலாற்று சிறப்புக்குரிய இது சுயாதீனமான ஒரு ஆட்சி அலகாகக் காணப்பட்டது. இலங்கை வரலாற்றின் இறுதி இராசதானியாகிய கண்டி இராதானியின் ஆரம்பம், பரம்பல், நிருவாக அமைப்பு, பொருளாதார, சமூக அமைப்பு ஆகியன பற்றி இந்த அலகில் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது.

**தேர்ச்சி**

இலங்கை அரசர்களின் மேன்மையை மதித்து சுதேச அருஞ்செல்வங்களைப் பாதுகாக்க முனைவார்.

**பாடவேளைகள் : 04**

**தேர்ச்சி மட்டம்**

8.1 கண்டி இராசதானியின் ஆரம்பம் மற்றும் பரம்பல் பற்றிய தகவல்களைத் தேடியறிவார்.

**கற்றற்பேறுகள்**

- கண்டி இராச்சியத்தின் ஆரம்பத்தையும் பரம்பலையும் விவரிப்பார்.
- கண்டி இராசதானி அரசர்களின் மேன்மையை விளக்குவார்.
- கண்டி இராதசதானியின் சுயாதீனம் பாதுகாக்கப்பட்ட விதத்தை விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

8. கண்டி இராசதானி
   8.1 ஆரம்பமும் பரம்பலும்
   - கண்டி இராசதானியின் அமைவு
   - கண்டியைத் தலைநகரமாகத் தெரிவு செய்தமை
   - கண்டி இராசதானியின் பரம்பலை பின்வரும் விடயங்களின் கீழ் விவரிக்குக.
   - கண்டி இராசதானியின் தனித்துவத்தைப் பாதுகாப்பதற்காக, அவர்கள் செயற்பட்ட விதத்தை உதாரணங்களுடன் விளக்குக.
     - 1521 இன் பின்னர் மலை நாட்டு அரசின் அதிகாரம் வளர்ச்சி பெற்றமை
     - முதலாம் விமரதர்மசூரிய மன்னன்
     - செனரத் மன்னன்

- இரண்டாம் இராஜசிங்க மன்னன்
- இரண்டாம் விமலதர்மசூரிய மன்னன்
- ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திரசிங்க மன்னன்
- புதிய அரச பரம்பரையின் ஆரம்பமும் அரசர்களும்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடத்துக்குப் பொருத்தமானவாறு தரவிருத்தி உள்ளீடுகளைத் தயாரித்துக் கொள்ளுங்கள்.

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

- பாடத்துக்குப் பொருத்தமானவாறு கற்றற்பேறுகள் அளக்கப்படும் வகையில் நியமங் களைத் தயாரித்துப் புள்ளி வழங்குங்கள்

**தேர்ச்சி மட்டம்**

8.2

கண்டி இராசதானியின் நிருவாகக் கட்டமைப்பானது சமகால, சமூக, பொருளாதார செயற்பாடுகளின் வினைத்திறனை மேம்பாட்டில் பங்களிப்புச் செய்த விதத்தினை எடுத்துக் காட்டுவார்.

**பாடவேளைகள் : 02**

**கற்றற்பேறுகள்**

- கண்டி இராசதானியின் நிருவாக முறையினைப் பகுத்தாய்வார்.
- கண்டி இராசதானியின் பிராந்தியப் பிரிவுகளைத் தேசப்படமொன்றில் குறித்துக் காட்டுவார்.
- நிருவாக ஒழுங்கமைப்பானது, சமூக, பொருளாதார வினைத்திறன் மீது பங்களிப்புச் செய்த விதத்தை விளக்குவார்.


**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

8.2 நிருவாக ஒழுங்கமைப்பு

பின்வரும் மாதிரியைப் பயன்படுத்தி மலைநாட்டு இராசதானியின் நிருவாக ஒழுங்கமைப்பை விளக்குக.

- நிருவாக அமைப்பு



நிருவாகம் தொடர்பான கருமங்களைப் பின்வரும் விடயங்களின் கீழ் விளக்குங்கள்.

**அரசனின் அதிகாரங்கள்**

- மலைநாட்டு அரசின் நிகரில்லா ஆட்சியாளன்
- சகல காணிகளதும் உரிமை அரசனுக்கு உரியது
- சட்டம், நிர்வாகம், நீதி தொடர்பான அதிகாரங்கள்
- அமைச்சரவையினதும் பௌத்த பிக்குகளினதும் ஆலோசனைப்படி நாட்டை ஆட்சி செய்தல்.

- "மகா அதிகாரம்"
  - அரசனுக்கு மாத்திரம் இரண்டாமவராதல்
  - பொதுவாக இரண்டு மகா அதிகாரம்மார் இருத்தல்

- நிருவாகப் பணிகளுக்குப் பொறுப்பான பிரதான பிரிவுகள்
- ரட்ட வசம்
- கண்டி இராசதானியின் நகரத் திட்டத்தையும் கிராமத் திட்டத்தையும் பின்வரும் விடயங்களின் கீழ் விபரியுங்கள்.
  - நகர அமைப்பும் கிராம ஒழுங்கமைப்பும்
  - நிருவாகத்தை இலகுவாக்குவதற்காக 21 பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தமை
    - 12 திசாவனிகள் தலைநகருக்குத் தொலைவில் அமைந்துள்ள பிரதேசங்களை நிருவகித்தல்
    - பிரதானிகள் - திசாவைமார்
    - திசாவனி - கோரளை - பத்து (சில கிராமங்கள்) கிராமம் / ஊர்
    - ரட்டைகள் 9 (தலைநகரை அண்மித்த பகுதிகள்)
    - பிரதானிகள் - ரட்டே மஹத்தயாக்கள்
    - பத்தே - திணைக்களங்கள்
    - வரிசேகரிப்பு அதிகாரிகள்
    - வரி வகைகள்
    - மகாவாசல
    - அரண்மனை நடவடிக்கைகள்
  - பாதுகாவலாளர், திறைசேரி, யுத்த, அரச களஞ்சியசாலை, அரச அரண் மனைக்குத் தேவையான சேவைகள், அரசுகளின் தனிப்பட்ட சுகபோக நடவடிக்கைகள்
  - விகாரைச் சொத்துக்கள்
  - விகாரைச் சொத்து நடவடிக்கைகள்
  - விகாரைச் சொத்துக்களைப் பராமரித்தல்
  - வழிபாடுகளை ஒழுங்கு செய்தல்
  - ஊர்வலங்கள் நடத்துதல் (பெரஹராக்கள்)

- நீதிமன்ற நடவடிக்கைகள்
    - நீதிமன்ற அதிகாரங்கள் பெரும்பாலாக அரசனைச் சார்ந்ததாக காணப்பட்டமை
    - அரசர் தீர்த்து வைத்த வழக்குகள்
    - உயர்நீதிமன்றம் (மக நடுவ)
    - நீதிபதிகள்
    - திசாவனி, ரட்டை, கோரளை, பத்து, கம (கிராம ஊர்) சார்ந்த வழக்குகள் அவ்வவற்றுக்குப் பொறுப்பான அதிகாரிகளால் தீர்க்கப்பட்டமை
    - தண்டனை முறைகள்

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடத்துக்குப் பொருத்தமானவாறு தரவிருத்தி உள்ளீடுகளைத் தயாரித்துக் கொள்ளுங்கள்.

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

- பாடத்துக்குப் பொருத்தமானவாறு கற்றற்பேறுகள் அளக்கப்படும் வகையில் நியமங் களைத் தயாரித்துப் புள்ளி வழங்குங்கள்

**தேர்ச்சி மட்டம்**

8.3 கண்டி இராசதானியின் மக்கள் வாழ்க்கையை விசாரித்தறிந்து அதில் வெளிக்காட்டப் படும் விழுமியங்களின் தனித்துவத்தை பாதுகாப்பார்.

**பாடவேளைகள் : 02**

**கற்றற்பேறுகள்**

- கண்டி இராசதானியின் பொருளாதார முறையை விளக்குவார்.
- கண்டி இராசதானியின் சமூக ஒழுங்கமைப்பை விவரிப்பார்.
- நல்லொழுக்கமிக்க சமூகமொன்றினைக் கட்டியெழுப்புவதற்கு கண்டிக்காலத் திலிருந்து பெறத்தக்க முன்மாதிரிகளை எடுத்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிடுவார்.


8.3.1 பொருளாதார முறை
- நுகர்வை அடிப்படையாகக் கொண்ட தன்னிறைவுப் பொருளாதார முறை காணப்பட்டமை
  - விவசாயம்
    - நெற்செய்கை
      - பயிர்ச்செய்கை முறைகள்
    - சேனைப் பயிர்ச் செய்கை
      - செய்கை பண்ணிய பயிர்கள்
    - வீட்டுத்தோட்டச் செய்கை
      - செய்கை பண்ணிய பயிர்கள்
    - விலங்கு வளர்ப்பு
  - கைத்தொழில்கள்
    - நாளாந்த வாழ்க்கைக்குத் தேவையான பாவனைப்பொருள் உற்பத்தி
    - கைத்திறன்களை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள்
    - அந்தந்தக் கைத்தொழில்களுக்குரிய பிரதேசங்கள் காணப்பட்டமை

மேற்படி விடயங்கள் உள்ளடங்குமாறு கீழே உள்ள அட்டவணையைப் பூர்த்தி செய்ய மாணவரை வழிப்படுத்துக.

- இதனை ஒரு தனியாள் செயற்பாடாக நடைமுறைப்படுத்துங்கள்.
- இணைப்பு - 01 இல் தரப்பட்டுள்ள அட்டவணை மாதிரியைக் கரும்பலகையில் எழுதிய பின்னர் அதனைத் தமது பயிற்சிப் புத்தகத்தில் பிரதி செய்து கொள்ளுமாறு அறிவுறுத்துங்கள்.
- பாடநூலைத் துணையாகக் கொண்டு அட்டவணையைப் பூர்த்தி செய்ய வழிப் படுத்துங்கள்.
- மாணவரது செயற்பாட்டின் இறுதியில், வகுப்பு மாணவருடன் கலந்துரையாடியவாறு சுண்ணப்பலகையில் உள்ள அட்டவணையைப் பூர்த்தி செய்யுங்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- **இணைப்பு : 1**




**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

பின்வரும் நியமங்களின்படி கணிப்பீடு - மதிப்பீட்டை நடத்துங்கள்.

- கண்டிக்கால பொருளாதார முறையை விளக்குவார்.
- கண்டிக்கால பொருளாதாரத்துக்கு அமைய அட்டவணையை பூர்த்தி செய்வார்.
- கண்டிக்கால பொருளாதாரத்தின் மூலம், தற்காலப் பொருளாதாரத்துக்காகப் பெறத்தக்க மாதிரிகளை எடுத்துக்காட்டுவார்.
- அட்டவணையைச் சரியாகப் பூர்த்தி செய்வார்.
- ஒத்துழைத்துச் செயற்படுவார்.

8.3.2 சமூக ஒழுங்கமைப்பு

கண்டி இராசதானியின் சமூக ஒழுங்கமைப்பைப் பின்வரும் விடயங்களின் துணையுடன் கட்டியெழுப்புங்கள்.

- காணிகளை முதன்மையாகக் கொண்டு சமூகம் ஒழுங்கமைக்கப் பட்டிருந்தமை
- சகல காணிகளதும் உரிமை அரசனுக்கு உரியதாக இருந்தமை
- காணி உரிமைகளையும் அனுபவிப்பையும் அடிப்படையாகக் கொண்டு காணிகள் வகைப்படுத்தப்பட்டிருந்தமை

  பின்வரும் காணி வகைககளை அறிமுகம் செய்து விளக்குங்கள்.
  - கபாடகம்
  - நிந்தகம்
  - விகாரை மற்றும் தேவாலகம்
  - பரவேனி

• கிராமிய சமூகம்

ஒழுக்கமிக்க மக்கட் சமூகம் காணப்பட்டமையைப் பின்வரும் விடயங்களின் மூலம் விளக்குங்கள்.

- பரஸ்பரம் ஒத்துழைப்பு காரணமாகப் பொருளாதாரத் தன்னிறைவான கிராமிய சமூகம் உருவாகியிருந்தமை
- பதவிகளும் ஜீவனோபாயமும் சாதி அடிப்படையில் அமைந்திருந்தமை
- திருமண முறைகள்
- குடும்பம் - பிரதான சமூக அலகாகக் காணப்பட்டமை
- பிதா முதன்மைச் சமூகம்
- கண்டி மக்கட் சமூகத்தின் மூலம் பெறத்தக்க முன்மாதிரிகளை வெளிக் கொணரத்தக்கவாறு கலந்துரையாடுக.
- பன்னசாலை - சமய மையம், கல்வி மையம் மற்றும் சமூகசேவை மைய மாகக் காணப்பட்டமை

கண்டி இராசதானியின் சமூக ஒழுங்கமைப்பு தொடர்பாக செய்தித்தாளொன்றுக்குப் பொருத்தமான கட்டுரையொன்று தயாரித்தல்.

- இதனைத் தனியாள் செயற்பாடாக நடைமுறைப்படுத்துங்கள்.
- கண்டிக்கால சமூக ஒழுங்கமைப்பு தொடர்பாக செய்தித்தாளொன்றுக்கு அனுப்பு வதற்காக கட்டுரையொன்று எழுதுமாறு மாணவருக்கு அறிவூட்டல் செய்யுங்கள்.
- கட்டுரையாக்கத்தின் போது படங்களை உள்ளடக்கி ஆக்கபூர்வமாகத் தயாரிக்கும் விதத்தை விளக்குங்கள்.
- செயற்பாட்டுக்காக ஏறத்தாழ ஒரு வார கால அவகாசம் வழங்குங்கள்.
- சகல செயற்பாடுகளையும் மதியுங்கள்.

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

பின்வரும் நியமங்களின்படி கணிப்பீடு - மதிப்பீட்டை நடத்துங்கள்.

- கண்டிக்கால சமூக ஒழுங்கமைப்பு பற்றிய தகவல்களை முன்வைப்பார்.
- சமூக ஒழுங்கமைப்பின் மூலம் பெறத்தக்க முன்மாதிரிகளை எடுத்துக்காட்டுவார்.
- சமூக ஒழுங்கமைப்புகள் தொடர்பான சரியான தகவல்களை உள்ளடக்கி, செய்தித் தாளொன்றுக்குப் பொருத்தமான கட்டுரையைத் தயாரிப்பார்.
- ஆக்கபூர்வமான வகையில் செயற்பாட்டைப் பூர்த்தி செய்வார்.
- குறித்த காலத்துள் ஒப்படைப்பார்.

## 10.9. ஐரோப்பிய மறுமலர்ச்சி

ஐரோப்பாவின் நவீன யுகத்தைக் குறித்து நிற்கும் வரலாற்று நிகழ்வு தான் மறுமலர்ச்சியாகும். மறுமலர்ச்சி ஏற்பட்ட விதம் உலகின் மீதும் இலங்கை மீதும் அதன் செல்வாக்கு ஆகியன குறித்து இந்த அலகில் கவனஞ் செலுத்தப்படுகின்றது.

**தேர்ச்சி**

வரலாற்று ரீதியான உலகப் போக்குகள் இந்நாட்டு வரலாற்றில் ஏற்படுத்திய தாக்கங் களை விசாரித்தறிந்து தமது அருஞ்செல்வத்தையும் தனித்துவத்தையும் பாதுகாத்து, உலகின் போக்குகளை எதிர்கொள்ளும் வலிமையைப் பெற்றுக் கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்**

9.1 ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சிக்கான வரலாற்றுப் பின்னணியை நுணுகி நோக்குவார்.

**பாடவேளைகள் : 04**

**கற்றற்பேறுகள்**

- மறுமலர்ச்சி என்பதைப் பகுத்தாய்வார்.
- மறுமலர்ச்சிக்குக் காரணங்காட்டுவார்.
- ஐரோப்பாவினது மாற்றத்தின் மீது மறுமலர்ச்சி செல்வாக்குச் செலுத்திய விதத்தை எடுத்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக்கொள்ளுங்கள்.

10.9. ஐரோப்பிய மறுமலர்ச்சி

9.1 மறுமலர்ச்சி அறிமுகம்

- ஐரோப்பாவில் காணப்பட்ட நிலமானிய சமூக முறைக்குப் பதிலாக பண்டைய கிரேக்க - உரோம நாகரிகங்களின் செல்வாக்கு கிடைத்தமை
- 15 ஆம் 16 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவின் அரசியல் பொருளாதார, சமயம், இலக்கியம் கைத்திறன் கலைகள், விஞ்ஞானம் ஆகிய சகல துறைகளிலும் ஏற்பட்ட மலர்ச்சி
- மறுமலர்ச்சிக்கு ஏதுவான காரணிகளைப் பின்வரும் கருமங்களின் கீழ் விவரியுங்கள்.
  - துருக்கியர்கள் கொன்சுதந்தினோபிளைக் கைப்பற்றியமை
  - வணிகம் விருத்தியடைந்தமை
    - அறிவு வளர்ச்சி

- ஐரோப்பாவின் மாற்றத்தின் மீது மறுமலர்ச்சியின் செல்வாக்குச் செலுத்திய விதத்தை உதாரணங்களுடன் விளக்குக.
- அறிவுசார் மறுமலர்ச்சி
  - இலக்கிய வளர்ச்சி
  - மானுடவியல்
  - கைத்திறன் கலைகள்

- அரசியல் மறுமலர்ச்சி
  - தேசிய அரசுகள் தோற்றம் பெற்றமை
  - மத்தியதர வகுப்பினரின் எழுச்சி

- பொருளாதார மறுமலர்ச்சி
  - வணிக வளர்ச்சியும் பணப் பயன்பாடும்

- விஞ்ஞான முன்னேற்றம்
  - கல்விமான்கள் புதிய கண்டுபிடிப்புக்களின்பால் கவனம் செலுத்தியமை
    - அகிலம் தொடர்பான புதிய கருத்துக்கள்
    - விஞ்ஞான முன்னேற்றம்

- புதிய வர்த்தகப் பாதைகள் கண்டறியப்பட்டமை
  - நாடுகள் கண்டு பிடிக்கப்பட்டமை

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பாடத்துக்குப் பொருத்தமானவாறு தரவிருத்தி உள்ளீடுகளைத் தயாரித்துக் கொள்ளுங்கள்.

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

- பாடத்துக்குப் பொருத்தமானவாறு கற்றற்பேறுகள் அளக்கப்படும் வகையில் நியமங் களைத் தயாரித்துப் புள்ளி வழங்குங்கள்

**தேர்ச்சி மட்டம்**

9.2 ஐரோப்பிய மறுமலர்ச்சியானது இலங்கை மீது செல்வாக்குச் செலுத்திய விதத்தை நுணுகியாய்வார்.

**பாடவேளைகள் : 02**

**கற்றற்பேறுகள்**

- மறுமலர்ச்சியை ஒரு பூகோள ரீதியான போக்காக எடுத்துக்காட்டுவார்.
- ஐரோப்பிய மறுமலர்ச்சியானது இலங்கை மீது செலுத்தும் செல்வாக்கினைப் பகுத்தாராய்வார்.
- பூகோள ரீதியான போக்குகளை எதிர்கொள்ள வேண்டிய விதத்தை எடுத்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிடுவார்.

- மறுமலர்ச்சியானது ஒரு பூகோள தோற்றப்பாடு என்பதை விளக்குக.
- பாடநூலில் அடங்கியுள்ள தொழிற்பாடடில் மாணவரை ஈடுபடுத்துக.

9.2 ஐரோப்பிய மறுமலர்ச்சியானது இலங்கை மீது செல்வாக்குச் செலுத்திய விதம்.
- அரசியலில்
- பொருளாதாரத்தில்
- பண்பாட்டில்

மேற்படி விடயங்கள் உள்ளடங்குமாறு பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.

- "ஐரோப்பிய மறுமலர்ச்சியானது இலங்கை வரலாற்றில் செலுத்திய செல்வாக்கு" எனும் தலைப்பில் கட்டுரை எழுதுதல்.
- கட்டுரை எழுதுவதற்குத் தேவையான விடயங்களோடு ஆயத்தமாக வரும்படி அறிவியுங்கள்.
- எழுதி முடித்த சில கட்டுரைகளை எழுமாறாகத் தெரிவு செய்து வகுப்பில் முன்வைக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- குறைகளை நிவர்த்தி செய்து பாடத்தை மீளாய்வு செய்க.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- மறுமலர்ச்சி தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள், இணையத் தளங்கள்

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

பின்வரும் நியமங்களின்படி கணிப்பீடு - மதிப்பீட்டை நடத்துங்கள்.

- மறுமலர்ச்சி என்பதை விளக்குவார்
- மறுமலர்ச்சியானது ஒரு பூகோளப்போக்கு என்பதை எடுத்துக்காட்டுவார்.
- ஐரோப்பிய மறுமலர்ச்சி இலங்கை மீது செல்வாக்குச் செலுத்திய விதத்தை எடுத்துக் காட்டுவார்.
- தலைப்புக்குப் பொருத்தமானவாறு விடயங்களை முன்வைப்பார்.
- நேரத்தை முகாமை செய்வார்.

## 10.10 இலங்கையும் மேற்கத்தேயரும்

புவியின் அமைவுக்கேற்ப இலங்கையானது கீழைத்தேய மற்றும் மேலைத்தேய பயண வழிகளின் பிரதானமான ஒரு மைய நிலையமாக அமைந்துள்ளது. மிகப் பழங்காலங் தொடக்கம் பல்வேறு நாடுகளுடன் இலங்கை தொடர்புகளைப் பேணிவந்துள்ளது. நவீன யுகத்தில் நாடுதேடல் முயற்சிகளின் போது இலங்கைத் தீவு ஐரோப்பியரின் கவனத்திற்கு உள்ளாகிய பிரதானமான ஒரு நாடாகும். அதற்கான பிரதானமான காரணம் இலங்கையின் புவியியல் அமைவிடமாகும். போர்த்துக்கல், ஒல்லாந்து, பிரித்தானியா ஆகியன இலங்கை மீது கவனஞ் செலுத்திய மேற்கத்தேய நாடுகளாகும். போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும் இலங்கையில் செயற்பட்ட விதம் தொடர்பான இந்த அலகில் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது.

**தேர்ச்சி**

நாடொன்றில் வெளிநாட்டு ஆதிக்கம் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை மேற்கத்தேயர் இலங்கையில் அதிகாரத்தைத் தாபித்தமையின் ஊடாக நுணுகியாய்வார்.

**தேர்ச்சி மட்டம்**

10.1 தொழினுட்ப ஆதிக்கம் மற்றும் இராசதந்திர உபாயங்கள் மூலம் போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் தமது ஆதிகக்த்தைப் பரவச் செய்த விதத்தினை விளக்கிக் கூறுவார்.

**பாடவேளைகள் : 06**

**கற்றற்பேறுகள்**

- போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் அதிகாரத்தைத் தாபித்த விதத்தைப் பகுத்தாராய்வார்.
- போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது இலங்கையின் அரசியல் நிலைமையை விளக்குவார்.
- வெளிநாட்டவரின் முன்னிலையில் இலங்கையர் காட்டிய எதிர்ப்புக்களை எடுத்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிடுவார்.

10. இலங்கையும் மேற்கத்தேயரும்

10.1 போர்த்துக்கேயரின் கீழைத்தேய வருகை

- மேற்கத்தேயர் இலங்கைக்கு வந்தமைக்கான காரணங்கள்
  - பொருளாதாரத் துறையில் இலாபம் பெறல்
  - சமயத்தைப் பரப்புதல்

- அரசியல் ரீதியில் சருவதேச கீர்த்தியைப் பெறுதல்
- மேற்கத்தேயர் இலங்கைக்கு வருகை தந்தமைக்கான காரணங்கள் பின்வரும் விடயங்களின் துணையுடன் கலந்துரையாடுக.
  - போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது இலங்கையின் அரசியல் நிலைமை
  - கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் என மூன்று பகுதிகளாகப் பிரிக்கப் பட்டிருந்தமை
  - கோட்டை சிம்மாசனத்துக்கான போராட்டம்
  - கோட்டை மூன்று பகுதிகளாகப் பிரிந்தமை
  - நாட்டில் (உள்நாட்டு) ஆட்சியாளர்களுக்கு இடையே ஒற்றுமை இன்மை
  - போர்த்துக்கேயர் அதிகாரத்தை கைப்பற்றிய சந்தர்ப்பங்களைப் பின்வரும் விடயங்களின் கீழ் கலந்துரையாடல்.

10.2 போர்த்துக்கேயர் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றல்
- கோட்டே இராச்சியத்தில் அதிகாரத்தைத் தாபித்தல்
- யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றல்
- போர்த்துக்கேயருக்கு காட்டப்பட்ட எதிர்ப்புக்கள்
- போர்த்துக்கேயருக்கு எதிராக எழுந்த சுதேச எதிர்ப்புக்களைப் பின்வரும் விடயங்களின் கீழ் கலந்துரையாடுக.
  - சீதாவாக்கை மாயாதுன்ன, முதலாம் ராஜசிங்க ஆகியோர் போர்த்துக் கேயரை எதிர்த்தமை
  - கண்டி இராச்சியத்தில் தோன்றிய எதிர்ப்புக்கள்
  - கண்டி இராச்சியத்தின் மீது போர்த்துக்கேயரின் முற்றுகை
  - போர்த்துக்கேயர் துரத்தியடிக்கப்பட்டமை

**10.3 ஒல்லாந்தரின் வருகை**
- இரண்டாம் இராசசிங்க மன்னன் போர்த்துக்கேயருக்கு எதிராக செயற்பட்டமை யானது ஒல்லாந்தருக்கு சாதகமாக அமைந்தமை.
- இலங்கையில் கரையோரப்பிரதேசங்களில் அதிகாரத்தை தாபித்தமை
- கண்டி இராச்சியத்துடன் ஒல்லாந்தரது, நட்பு ரீதியான நடவடிக்கைகள்
- பொருளாதாரத்தின் மூலம் உத்தேச நன்மைகளைப் பெற நடவடிக்கை எடுத்தமை
- ஒல்லாந்தரின் கீழ் இருந்த கரையோரப்பிரதேசங்களை ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தமை

• இலங்கையில் போர்த்துக்கேயரதும் ஒல்லாந்தரதும் அதிகாரப் பரம்பலை இலங்கைப்பட மொன்றில் குறித்துப் பெயரிடுக.
  - பின்வரும் இடங்களைப் பயன்படுத்தவும்

• மன்னார், யாழ்ப்பாணம், புத்தளம், மட்டக்களப்பு, கொட்டியாரம், கற்பிட்டி, கொழும்பு, சிலாபம், நீர்கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, முல்லைத்தீவு, கண்டி, கம்பளை

- “இலங்கையும் மேற்கத்தேயரும்” எனும் பாடத்தின் பாடவிடயங்களை உள்ளடக்கி சுருக்கக்குறிப்புப் புத்தகமொன்று தயாரிக்குமாறு மாணவரை வழிப்படுத்தல்.
- இதனை ஒரு தனியாள் செயற்பாடாக நடைமுறைப்படுத்துங்கள்.
- “சுருக்கக் குறிப்புப் புத்தகமொன்றினைத்” தயாரிக்குமாறு மாணவருக்கு அறிவுறுத் துங்கள்.
- சுருக்கக்குறிப்புப் புத்தகம் பற்றியும், சுருக்கக் குறிப்பு எழுதும் விதம் பற்றியும் விளக்கமளியுங்கள்.
- கருமத்தைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமான கால அவகாசம் வழங்குங்கள்.
- குறித்த தினத்தில் பொறுப்பேற்று ஆக்கங்களை மதிப்பீட்டுக்கு உட்படுத்தி வகுப்பில் கலந்துரையாடுங்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- இலங்கையும் மேற்கு நாடுகளும் தொடர்பான நூல்கள்

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள்**

பின்வரும் விடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிடுவார்.

- “இலங்கையும் போர்த்துக்கேயரும்” பாடத்துக்கு அமைவான தகவல்களை முன் வைப்பார்.
- மேற்கத்தேயரின் முன்னிலையில் தமது சுயாதீனத்தைப் பாதுகாத்துக்கொண்ட தலைவர் களை மதிப்பார்.
- பொழிப்பாக்கி எழுதுந்திறனைப் பெறுவார்.
- ஆசிரியர் நடத்தும் கலந்துரையாடலில் பங்குபற்றுவார்
- பூர்த்தி செய்த ஆக்கத்தைக் குறித்த தினத்தில் ஒப்படைப்பார்.